# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆவணி 05 ஞாயிற்றுக்கிழமை [22-08-1999] UTHAYANA Lively National Tamil Daily கதிர்: 230


## விமானப் படை முகாம் மீது புலிகள் மோட்டார் தாக்கு!

### மட்டக்களப்பில் நேற்றுச் சம்பவம்

மட்டக்களப்பு விமானப் படை முகாம் மற்றும் வவுண தீவுமுகாம் ஆகியவற்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று நண்பகல் மோட்டார் தாக்குதல்களை நடத்தினர்.

நண்பகல் 12 மணி முதல் சுமார் முக்கால் மணி நேரமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முகாம்கள் மீது நான்கு மோட்டார்கள் ஏவப்பட்டன என்றும் —

அவை முகாம்களுக்கு வெளியே வீழ்ந்து வெடித்ததன் காரணமாகபடையினருக்குச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் — மட்டக்களப்பு படை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-6-21)

## வவுனியாவில் மின்மாற்றிகளை பாதுகாக்க மின்சார வேலி

### நேற்றைய கூட்டத்தில் முடிவு

வவுனியா, ஒக. 22

வவுனியாவில் உள்ள 16 மின்மாற்றிகளுக்கு மின்சார வேலி அமைத்து பாதுகாப்பு வழங்குவது எனவும் —

7 மின்மாற்றிகளை மட்டும் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்மாற்றம் செய்வது எனவும் —

வவுனியாவில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9 மணிக்கு வவுனியா இராணுவ முகாமில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, வவுனியா நகர பிரிகேடியர் ஜயவர்த்தன, பொலீஸ் அத்தியட்சகர், வவுனியா அரச அதிபர் கே. கணேஸ் மற்றும் மின்சார சபை பிரதம பொறியியலாளர் எஸ். சபாரத்தினம் ஆகியோர் நேற்றைய கூட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### ஒருவர் பலி

கைதடி சந்திக்கு அருகில் நேற்று இடம்பெற்ற டிரக்— மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் அதே இடத்தில் பலியானார்.

நேற்று மாலை 6.15 மணியளவில் இடம்பெற்ற இந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த ஆண்டு இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு!

## புலிகளினதும் மற்றும் கட்சிகளினதும் ஆதரவை ஜனாதிபதி கோருகிறார்

கொழும்பு, ஒகஸ்ட் 22

**2,000 ஆம் ஆண்டுக்குள் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும். விடுதலைப் புலிகளும் ஐக்கிய தேசியக் கட்சியும் மற்றும் பொறுப்புள்ள சகல கட்சிகளும் அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.**

**மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வேண்டுகோள் விடுத்தார்.**

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி ஏற்று ஐந்தாண்டுகள் பூர்த்தியானதையொட்டி நேற்று நடைபெற்ற பேரணியின் இறுதியில் ஹவ்லக்ரவுனில் உள்ள பீ. ஆர். சி. மைதானத்தில் பொதுக் கூட்டம் ஒன்றுநடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி மேலும் பேசுகையில், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அதிகாரப் பரவலாக்கல் திட்டம் முதலில் நிறைவேற்றப்படும். அதன் பின்னரே நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படும். இனப்பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்த்து வைப்பதே எமது திட்டம் ஆகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தை எவரும் அசட்டை செய்து விடமுடியாது. இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்த நாட்டில் வாழும் சகல சமூகங்களும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்' அலுவலகம் மீது நேற்றிரவு கிரனேட் வீச்சு!

### ஊழியர் காயம்; கார்கள் சேதம்

யாழ்ப்பாணம், ஒக. 22

'உதயன்' பத்திரிகை அலுவலகத்தின் மீது நேற்றிரவு 8.30 மணியளவில் இரண்டு கிரனேட்டுகள் வீசப்பட்டன.

இதனால் பாதுகாப்பு ஊழியரான ஆர். செல்வராஜா (வயது 45) முதுகில் காயமடைந்தார். இரண்டு கார்கள் மற்றும் சில சைக்கிள்கள் சேதமடைந்தன. காயமடைந்த பாதுகாப்பு ஊழியர் ஆஸ்பத்திரியில்

[11 ஆம் பக்கம் பார்க்க]

## பிஸ்ரல் குழுவினர் நேற்று மட்டக்களப்பில் தாக்குதல்!

### பொலீஸார் ஒருவர் பலி

மட்டக்களப்பு, ஒக. 22

மட்டக்களப்பு ஓட்டமாவடியில் நேற்று மாலை விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினர் நடத்திய தாக்குதலில் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள் கொல்லப்பட்டார்.

நாசகாரத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த ஏ. யு. உபாலி என்பவரே கொல்லப்பட்டவராவார்.

வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இவரை வழிமறித்த புலிகளின் பிஸ்ரல் குழுவைச் சேர்ந்த நபர் இவர் மீது தாக்குதல் நடத்தியதாகவும் —

இவரது ஆயுதமும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — இந்தச் சம்பவத்தில் ஏ. எம். முகமட் புஹாரி (வயது 28) என்ற பொதுமகன் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-6-21)

## அலங்கார ஊர்திகளுடன் நேற்று நடந்த பேரணி!

### 2 லட்சத்துக்கு மேற்பட்டோர் பங்கு

கொழும்பு, ஒக. 22

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவியேற்று ஐந்தாண்டுகள் பூர்த்தியானதையொட்டி பலத்த பாதுகாப்புடன் நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட பேரணியில் 2 லட்சத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கிலிருந்து நேற்றுக் காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இந்தப் பேரணி ஹவ்லக்ரவுன் பி. ஆர். சி. மைதானம் வரை நடைபெற்றது காலை 11.30 மணிக்கு ஆரம்பமான இந்தப் பேரணி இரவு 7.30 மணி வரை நடைபெற்றதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆமர் வீதி, மருதானை ஜேம்ஸ் வீதி, கண் ஆஸ்பத்திரிசந்தி, ஹவ்லக்வீதி வழியாக ஊர்வலம் பி. ஆர் சி. மைதானத்தை சென்றடைந்தது.

பொது மக்கள் முன்னணி அரசின் ஐந்து வருட

(11 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறைத் தாக்குதலில் இரு புலிகள் உயிரிழப்பு

வவுனியா, ஒக, 22

அம்பாறை மாவட்டம் 13 ஆம் கொலனிப் பகுதியில் கடந்த புதன்கிழமை அதிரடிப்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தமது தரப்பில் இருவர் உயிரிழந்தனர் என்றும்—

ஆயுதங்கள் சில தம்மால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும்—விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

சிவப்பிரகாசம் அல்லது ராஜா (தியாகரத்தினம் கங்காதரன்—மட்டக்களப்பு),

(11 ஆம் பக்கம் பார்க்க)

### கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 22

காணாமல் போனவர்களது இறப்பினை பதிவு செய்வதற்காக பிரதேச செயலர் பிரிவுகளில் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தினை காணாமல் போனோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் எவரும் நிரப்பிக் கொடுக்கக்கூடாது என்று மேற்படி சங்கம் தெரிவித்துள்ளது.

காணாமல் போய் இறந்து போனவர்கள் என்று உறுதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பகுதியிலிருந்து நாளை 500 பேர் வவுனியா வருவர்

வவுனியா, ஒக. 22

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து நாளை 500 பேர் வவுனியாவுக்குள் வர உள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகள் வவுனியா அரச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின் பயணம் தொடர்பாக விடுதலைப்புலிகளினால் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மூலம் வவுனியா அரச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ். கண்டிவீதியில் மாங்குளம் ஊடான பாதையில் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு வழித்துணை வழங்க செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தயாராக இருந்தபோதும் அரசு தரப்பில் தாமதம் செய்யப்பட்டு வருவதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

(இ-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

பரு/ இறங்குதுறைப் பொறுப்பதிகாரி
திரு. இரா. சிவலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை

### சின்னையா இராமநாதன்

அவர்களின் மறைவினை ஒட்டி அன்னாருக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியினை செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்துக்கின்றோம். அத்தோடு அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பரு/இறங்குதுறைப் புனர்வாழ்வுப் பகுதி
உத்தியோகத்தர்கள்.

(68397)

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா இராமநாதன்

கோவிற்கடவை துன்னாலை மத்தியைச் சேர்ந்த சின்னையா இராமநாதன் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் பிரபல சைவத்தொண்டனும் இராமாசிப்பிள்ளையின் அன்புக் கணவரும், முத்துக்குமாரு[ஓய்வு பெற்ற மதுவரி உத்தியோகத்தர்], மயில்வாகனம் [ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்], காலஞ்சென்ற மகேஸ்வரி வீரவாகு, இராஜசிங்கம்[கனடா], செல்வவிநாயகம்[உணவுக்கட்டுப்பாட்டுதிணைக்களம்], சிவலிங்கம்[பருத்தித்துறை இறங்குதுறைப் பொறுப்பதிகாரி],சிவயோகம்[நோர்வே],அமிர்தலிங்கம்[கனடா[, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லம்மா, பாக்கியம் [இந்தியா], தேவமலர்[கனடா[, பார்வதி நவரத்தினம், சிவலிங்கம்[நோர்வே],தயாபரி [கனடா], பாலசுப்பிரமணியம்[முன்னாள் உத்தியோகத்தர், கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்] ஆகியோரின் அன்பு மாமனாரும் மற்றும் செல்வக்குமாரி [ஜேர்மனி], விமலகுமாரி,சாந்தகுமாரி[ஆசிரியை, யா/ சின்னத்தம்பி வித்தியாலயம், கரவெட்டி], சிவகுமார் [ஜேர்மனி], சந்திரகுமார் [ஜேர்மனி], நந்தகுமாரி, வசந்தகுமாரி [லண்டன்], விஜயகுமாரி [பிரான்ஸ்], ஜெயக்குமார், ரவிக்குமார் [லண்டன்], இந்திரகுமார்[இந்தியா], காலஞ்சென்ற விபுலகுமார் மீனாகுமாரி[கனடா], ரமேஷ்குமார்[கனடா], ராஜ்குமார் [லண்டன்], ரூபகுமார் [யாழ். பல்கலைக்கழகம். கலைப்பீடம்], செந்தூர்குமார் [இறங்குதுறை பருத்தித்துறை], அசோக்குமார், அகிலகுமார் [யா/ஞானசாரியார் கல்லூரி உயர்தர மாணவன்], திலீப்குமார், அருண்குமார், ராதாகுமாரி, பிறேமஜெயந்தி [நோர்வே], வசீகரன் [நோர்வே[, உமா[நோர்வே], நிதிகரன் [நோர்வே], தமிழினி [நோர்வே], நீதிகரன் [நோர்வே], அமிர்தகுமாரி [கனடா], சுகிர்தகுமாரி [கனடா], சுவர்ணகுமாரி [கனடா], பிரபாகரன் [சித்த மருத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகம்], கிருபாகரன் [இறங்குதுறை பருத்தித்துறை], நித்தியதரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கோவிற்கடவையிலுள்ள அவரது இல்லத்தில் 22—08—99 இன்று ஞாயிறு காலை 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. முத்துக்குமாரு
[மகன்]

கோவிற்கடவை,
துன்னாலை.
[சி/8596]

திருமதி
### செல்லமுத்து சிவசுப்பிரமணியம்

விழிசிட்டி தெல்லிப்பழையைச் சேர்ந்த திருவாட்டி செல்லமுத்து சிவசுப்பிரமணியம் அவர்கள் 21-08-99 வைகறைப் பொழுதில் நகுலேஸ்வரப் பெருமானின் பாதாரவிந்தங்களை அடைந்தார்.

அன்னார் சிவத்திரு. செல்லையா சிவசுப்பிரமணியம் [முன்னாள் அதிபர், தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை] அவர்களின் அன்பு மனைவியும், திருமதி கதிராசிப்பிள்ளை சிற்றம்பலம், திருமதி தங்கம்மா சண்முகநாதன் [இளைப்பாறிய ஆசிரியை, யா/ மகாஜனக் கல்லூரி] ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி கோகிலாதேவி, மகேந்திரராஜாவின் [எழுத்தாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் வலிகாமம் வலயம்] பாசமிகு தாயாரும், மகேந்திரராஜாவின் [அதிபர், அருணோதயக் கல்லூரி] அன்பு மாமியாரும், பிரவீணனின் [மாணவன் யூனியன் கல்லூரி], அன்புத் பேர்த்தியும், முருகையா [பிரதம லிகிதர், தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்], ஜனார்த்தனன் ]ஸ்ரீலங்கா ரெலிகொம், யாழ். கிளை], கௌசிதகி [மாணவி, யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடம்] ஆகியோரின் பெரிய தாயாரும் சதீஸ்பால முருகன் [மாணவன், பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற் பீடம்], பாலநிதி [மாணவி, மகாஜனக் கல்லூரி] ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (21-08-99) சனிக்கிழமை பிற்பகல் இணுவிலில் உள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திருமதி கோகிலா மகேந்திரன்
[மகள்]

ஆஸ்பத்திரி அருகில்,
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.
(68374)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

காரைநகர் நூலக வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்ட தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்பில் தோற்றியோருக்குசான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு காரைநகர் போரூட் நிறுவனத்தில் நூலக வளர்ச்சிக்கழகத் தலைவர் நா. குகநேசன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்லநாயகம், யாழ்ப்பாணம் போரூட் நிறுவன திட்ட அலுவலர் என். கோகுலதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தட்டெழுத்துப் பயிற்சி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

## நாகம்ஸ்
சுன்னாகம்
கார்த்திக், நக்மா,
கவுண்டமணி நடித்த
### மேட்டுக்குடி
காட்சிகள் 11.00, 2.30
[ புதிய நேரம் ]
நாளை முதல்
நினைத்தேன்
வந்தாய்
(68392)

## ராஜா
யாழ்ப்பாணம்
பிரசாந்த் – ஐஸ்வர்யா
நாசர் நடித்த
### ஜீன்ஸ்
10-30, 1.45, 5.00
(புதிய நேரம்)
அடுத்த வெளியீடு
பாண்டியன்
(சி/8476)

## லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
நெப்போலியன், சுவலட்சுமி
நடித்த
### பொன் விழா
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10-30, 2-30
(68360)

## உங்கள் கவனத்துக்கு

நமது நாட்டில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக 1990 ஆம் ஆண்டில் இருந்து மூடப்பட்டிருந்த

இளவாலைத் திருக்குடும்ப கன்னியர் மட

### சிறுவர் இல்லம்
(அநாதை இல்லம்)

மீண்டும் 1998 ல் ஆரம்பிக்கப்பட்டது. மேல் மாடிக் கட்டடம் முடிவுறாத நிலையில் போதிய மாணவர்களை அனுமதிக்கவில்லை. தற்போது அனுமதிக்கமுன்வந்துள்ளோம். எனவே விண்ணப்பிக்க விரும்புவோர் விடுதிச்சாலை முகாமையாளருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

அத்துடன் இதே இல்லத்தில் இயங்கிவந்த
திருக்குடும்பக் கன்னியர்மட விடுதிச்சாலை
2000 ஆம் ஆண்டில் திறக்கப்பட இருக்கிறது. அனுமதி பெற விரும்புவோர் சனி, ஞாயிறு தினங்களில் விடுதிச்சாலை முகாமையாளருடன் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.

சிறுவர் இல்ல முகாமையாளர்
இளவாலை
(68394)

உ

வடபிராந்திய இந்துப் பேரவை (யா/மா)
நல்லூர் உற்சவகால
## தெய்வீக நிகழ்ச்சிகள்

தலைமை:- கலாபூஷணம் சங்கீதபூஷணம்
ப. சந்திரசேகரம் (தலைவர்)
இடம்:- அறுபத்து மூவர் மடம், நல்லூர்
நிகழ்ச்சிகள் (மாலை 6 மணி முதல் 7 மணி வரை)
திருமுறை ஓதல், பிரார்த்தனை
சொற்பொழிவு:- 21-08-99 முதல் 28-08-99 வரை
விடயம்:- கந்தரநுபூதி, திருமந்திரம்
நிகழ்த்துபவர்:- சிவத்தமிழ் வித்தகர்
சிவமகாலிங்கம் அவர்கள்
(உப அதிபர் பலாலி ஆசிரிய கலாசாலை)
(சி/8600)

## கண்ணீர்ப் பூக்கள்

எமது சிரேஷ்ட விரிவுரையாளரும்
வலிகாமம் – வலயம் உதவிக் கல்விப்பணிப்பாளருமாகிய
திருமதி கோகிலா மகேந்திரன்
அவர்களின் அன்புத் தாயாராகிய
### திருமதி செல்லமுத்து சிவசுப்பிரமணியம்

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன் அவர்தம் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

'குணமாகும் மனங்கள்'
(சி/8652)

## திருமண அழைப்பு

அன்புடையீர்,
நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஆவணி 5 ஆம் நாள் (22-08-99) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 6. 35 மணி முதல் 8. 11 வரையுள்ள கும்ப லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது
திருநிறை செல்வன்
### நாகராசா
[நாகராசா ஸ்ரோர்ஸ்]
அவர்களுக்கும்



எமது
திருநிறை செல்வி
### திலகவதி
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு இணுவில் பரராஜசேககப் பிள்ளையார் ஆலய முன்றலில் திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மண மக்களை ஆசீர்வதித்து விழாவில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

இ. கந்தையா,
நாகராசா ஸ்ரோர்ஸ்,
607, கே. கே. எஸ் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

பிள்ளையார் கோயிலடி,
களபூமி, காரைநகர்

பொ. சிவசுப்பிரமணியம்
விநாயகர் றேடேர்ஸ்
1026, கே. கே. எஸ் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
அரசடி சந்தி, யாழ்ப்பாணம்.

குண்டங்கரை
களபூமி காரை நகர்

இரு வீட்டார் அழைப்பு
(68388)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டிலால் விழ்ந்து நோயாளி மரணம்

# ஆஸ்பத்திரி நடவடிக்கைகள் குறித்து விசனம் தெரிவிக்கின்றது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஒக. 22

யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளி ஒருவர் கட்டிலில் இருந்து விழுந்து இறந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக ஆஸ்பத்திரியில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து யாழ். நீதிமன்றம் விசனம் தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி 13 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியின் மூன்றாம் வார்ட்டில் கட்டிலில் இருந்து விழுந்து மரணமானதாகக் கூறப்படும் நாகராஜா விஜயலட்சுமி என்பவரின் மரணம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடத்திய பின்னர் யாழ். நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் இவ்வாறு விசனம் தெரிவித்திருக்கின்றார்.

தமது விசாரணை தொடர்பான இறுதி அறிக்கையில் நீதிவான் தெரிவித்திருப்பதாவது:-

மொட்டையான ஏதோ ஒரு பொருளுடன் தலை மோதுண்டதால் ஏற்பட்ட காயம் காரணமாக மூளையின் வெளிப்புறச்சவ்வின் வெளிப்புறமும் உட்புறமும் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு, அதனாலும் அதிர்ச்சியாலும் இருதயச்சுவாச செயற்பாடு நின்றுபோய் அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவதினம் இவர் தொடர்பாக அந்த வார்ட்டில் பணிபுரிந்த தாதியர்கள், வைத்தியர்கள் கவனக்குறைவாகவும் அசட்டையாகவும் பொறுப்பற்ற விதத்திலும் நடந்து இருப்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டியுள்ளது.

உள்ளக நோயாளியாக இருந்த ஒருவர் வார்ட்டில் விழுந்து காயமுற்றால் எடுக்கப்படவேண்டியநடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. காலஞ்சென்றவர் எவ்வாறு காயமுற்றார் என்பதை அறிவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எதுவுமே எடுக்கப்படவில்லை. நோயாளி ஒருவர் விழுந்து காயம் அடைந்தால் விழுகைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற விதி வைத்தியசாலையில் இருக்கவும் அந்நடவடிக்கை முறை பின்பற்றப்படவில்லை.

சம்பந்தப்பட்ட நோயாளி கீழே விழுந்து ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் ஆகியும் அங்கேயே தொடர்ந்து கிடந்ததையும் அங்கு பணிபுரிந்த எவரும் அதனை கவனிக்காது இருந்த ஒரு நிலைமையை இங்கு சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

சட்ட வைத்திய அதிகாரி மற்றும் டாக்டர்களின் சாட்சியத்தின்படி மரணம் உடனேயே ஏற்பட்ட ஒன்றுஎன்று நீதிமன்று கருதுகின்றது.

சம்பந்தப்பட்ட ஆவணங்களில் நோயாளி விடுவிக்கப்பட்டதாக (Discharged) என்ற சொல் எழுதப்பட்டு, அந்தச் சொல் கீறப்பட்டு அதன் பின்னர் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. எனக்கு முன்னால் அளிக்கப்பட்டுள்ள சாட்சியங்களின்படி அந்தச் சொல் கீறப்பட்டு அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பதிவுகள் குறித்த தினத்தன்றே செய்யப்பட்டனவா என்பதில் எனக்கு ஐயம் இருக்கின்றது.

காலஞ்சென்றவருக்குக் காயம் ஏற்பட்ட உடனேயே மரணம் சம்பவித்து இருக்குமானால், விழுந்தவருக்குத் தாங்கள் வழங்கியதாகக் கூறப்படும் முதற் சிகிச்சை என்பன தொடர்பான பதிவுகள் நம்பமுடியாதவை.

காலையில் சுகதேகியாக இருந்த ஒருவர் மாலையில் வைத்தியசாலையிலேயே விழுந்து காயமுற்று மரணித்த ஒரு சம்பவத்தில் அவர் எவ்வாறு காயமுற்றார் என்பதை அறிவதற்குரிய நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் எடுக்காதது கவலைக்குரிய விடயம் மட்டுமல்ல கண்டிக்கப்படவேண்டிய விடயமும் ஆகும்.

சிகிச்சைக்காக நோயாளி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும்போது, அவர் வைத்தியசாலையை விட்டு வெளியே செல்லும் வரை வைத்தியசாலையின் நம்பிக்கைப் பொறுப்பில் இருக்கின்றார் என்பதை வைத்தியசாலையில் பணிபுரிகின்ற சகலரும் உணர்ந்து கொள்ளவேண்டும். மனிதாபிமானத்துடன் கூடிய நம்பிக்கைப் பொறுப்பை எவரும் தட்டிக் கழிக்கக்கூடாது.

காலஞ் சென்றவர் எவ்வாறு காயமுற்றார் என்பதை அறிந்து கொள்ளமுடியாமல் இருப்பது விசனத்திற்கு உரியதாகும். இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் வைத்தியசாலையில் நிகழாமல் இருப்பதை உறுதி செய்யவேண்டிய பொறுப்பு வைத்தியசாலை நிர்வாகிகளுக்கு உரியதாகும்—என்று தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைப் பணிப்பாளரின் முழுப் பாதுகாப்பில் இருக்கவேண்டிய சில மூல ஆவணங்களின் நிழற்படப் பிரதிகளை சாட்சியமளிக்க வந்த டாக்டர் ஒருவர் வைத்திருந்தது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயம் என்று தெரிவித்த நீதிவான் —

''மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டிய ஆவணங்கள் அத்தகைய கட்டுக்காவலையும் மீறி மற்றையோரின் கைகளுக்குச் செல்லக்கூடிய வகையில் இருந்திருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அத்தகைய சூழ்நிலை ஆவணங்களில் சில பதிவுகள் பின்னர் புகுத்தி இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக ஊகிக்க வைக்கின்றது''—என்றும் தெரிவித்துள்ளார். (உ)

# புலிகள் பகுதிக்குச் செல்வதற்கு அனுமதி கேட்கிறார் ஜயலத்

கொழும்பு, ஒக 22

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கும் இடையில் மாங்குளம் பகுதியில் திறக்கப்பட்டுள்ள பாதை ஊடாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குச் செல்வதற்கு அனுமதி வழங்குமாறு ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தனா ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

வன்னியில் இன்னல்படும் மக்களின் தேவைகளை நேரில் அறிந்து அவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு வசதியாக தாம் அங்கு செல்ல விரும்புவதாகவும —

அதற்காக அங்கு செல்வதற்கான அனுமதியைத் தனக்கு வழங்கும் படியும்— அவர் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார். (உ-3)

# யாழ்.மாநகர சபை பொது நூலகத்தில் உயர்தர மாணவருக்கான நூல்கள்

யாழ்ப்பாணம். ஒக 22

யாழ். மாநகரசபையின் வீடமைப்பு அதிகாரசபையின் கட்டடத்திலுள்ள பொது நூலகத்தில் உயர்கல்வி மாணவர்களுக்குத் தேவையான மருத்துவ, விஞ்ஞான, கலை மற்றும் துறைசார்ந்த நூல்கள். ஆராய்ச்சிக் கட்டுரைகள் உட்பட பல அரியபெரும் நூல்கள் இருப்பதாகவும் அவற்றை மாணவர்கள் பயன்படுத்தலாம். என்றும் நூலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன..

மாணவர்கள் தங்கியிருந்து வாசிப்பதற்கு நூலகத்தில் வசதிகள் செய்யப்பட்டிருப்பதாக்வும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

கணனித்துறை நூல்கள். முகாமைத்துவமும் கணக்கியலும், மாணவர்களின் செய்முறைக்குத் தேவையான நூல்கள், கலைக் களஞ்சிய நூல்கள், நாட்டாரியல் சார்பான வெளியீடுகள், உயர்கல்விக்கான பாடப் புத்தகங்கள், அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டுவெளியீட்டு நூல்கள் என பல்கலைக்கழக மாணவர்கள், உயர்கல்வி மாணவர்கள். ஆராய்ச்சியாளர்கள், நிபுணர்கள், வைத்தியர்களுக்குப் பயன்படும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் பொது நூலகத்தில் தற்பொழுது பாவனையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருதயநோய் சார்பான வீடியோ கசெட்டுகளும் ஆங்கில மொழி கற்பதற்குரிய வீடியோ கசெட்டுகளும் அங்கு உள்ளன. தேவையேற்படின் இவற்றினை தொலைக்காட்சியில் பார்ப்பதற்குரிய வீடியோ டெக் வசதிகளும் நூலகத்தில் தற்பொழுது செய்யப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் மற்றும் சுற்றுச் சூழல் சார்பான சர்வதேச அறிக்கைகள், வரலாறு, சரித்திரம் புவியியல் உட்பட கலை இலக்கிய வெளியீடுகள் பலவும் யாழ். நூலகத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

1998 ஜனவரியில் மீள ஆரம்பிக்கப்பட்ட யாழ். பொது நூலகத்திற்கு தமிழக அரசு, ஏசியா பவுண்டேசன், பிரிட்டிஷ் அரசு, இலங்கை பாதுகாப்பு படைகள், 'புக் எய்ட்ஸ் இன்ரநஷனல்' போன்றவற்றினால் 35 லட்சம் ரூபா பெறுமதிமிக்க நூல்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. இதைவிட 20 லட்சம் ரூபாவுக்கு நூலகத்தினால் நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக பிரதம நூலகர் எஸ். தனபாலசிங்கம் தெரிவித்தார்.

இத்தகைய பெறுமதி மிக்க நூல்களை சம்பந்தப்பட்டவர்கள் பயன்படுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்புகளாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். பொது நூலகத்தின் கிளை நூலகங்கள் நல்லூர், வண்ணார்பண்ணை, குருநகர், நாவலர் கலாசார மண்டபம் போன்ற இடங்களில் தற்பொழுது இயங்கி வருகின்றன. [ஐ-5-ரி]

# பளை கிராம அலுவலர் பிரிவுகளில் விரைவில் தொழிற்பயிற்சிகள்

தென்மராட்சி, ஒக. 22

பளைப் பிரதேசத்தில் உள்ள 16 கிராம அலுவலர் பிரிவுகளில் 80 லட்சம் ரூபா செலவில் தொழிற் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் தலா இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் இப்பகுதி மக்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

கிடுகு பின்னுதல், கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, காடு வளர்ப்பு, வானொலி, தொலைக்காட்சி, நீரிறைக்கும் இயந்திரம் ஆகியவை திருத்தம், தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி வகுப்பு, கொப்பறா உற்பத்தி, தும்புத் தொழில் ஆகிய பயிற்சிகள் வழங்குவதற்கு ஒரு பயிற்சிக்கு தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிடப்படவுள்ளது. [ஐ-117]

## நியமனம் பெறத் தவறியோருக்கு

1996 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் வதிவிடச் சான்றிதழ்சமர்ப்பிக்காத காரணத்தால் நியமனம் பெறத் தவறியவர்களுக்காக அண்மையில் இடம்பெற்ற நேர்முகப்பரீட்சையில் தோற்றியவர்களை தமது சுயவிவரப்படிவங்களைப் பூர்த்தி செய்ய எதிர் வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் தமது அலுவலகத்துக்கு சமுகம்தருமாறு தென்மராட்சி வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-3)

## முத்தமிழ் விழா நடத்த ஏற்பாடு

வலி. கிழக்கு, ஒக 22

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஒக்ரோபர் மாதம் மூன்று தினங்கள் முத்தமிழ் விழா நடத்த பிரதேச கலாசார குழுவினர் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் பொருட்டு இப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், கலாமன்றங்கள், கலாசாரக் கழகங்கள் தனியார் ஆகியோரிடம் இருந்து கலை நிகழ்ச்சிகளை இக்குழுவினர் கோரியுள்ளனர்.

இயல், இசை, நாடகம், கூத்து, கும்மி, கரகம் ஆகிய பாரம்பரிய கலைபண்பாட்டு விழுமியங்களை சித்திரிக்கும் நிகழ்ச்சிகள் விழாவில் இடம் பெற உள்ளன. (ஐ-180)

## தொலைக்கல்வி இறுதித்தேர்வு

யாழ்ப்பாணம், ஒக. 22

பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்று தொலைக் கல்விப் பயிற்சி நெறியின் இறுதித் தேர்வில் தோற்றி சித்தியடையத் தவறியோருக்கான பகுதி ஒன்று, பகுதி இரண்டுப் பரீட்சைகள் எதிர் வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஐ-க)

## கொடுப்பனவு வழங்கப்படவில்லை

கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிலும் யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கு 1997 ஆம் ஆண்டின் இறுதிக்காலாண்டுக்குரிய இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்களுக்கு 1998 ஆம் ஆண்டுக்குரிய இடர்காலக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவரும் வேளை தமக்குரிய நிலுவைக் கொடுப்பனவு வழங்கப்படாதது குறித்து ஆசிரியமாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஐ-7)

# வீடமைப்புக் கடன் பெற்றவர்கள் சலுகையுடன் திருப்பிச் செலுத்தலாம்

அச்சுவேலி, ஒக. 22

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் 1984 ஆம், 1994 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் வீடமைப்புக்கடன் பெற்றவர்கள் கடனையும் வட்டியையும் முழுமையாகச் செலுத்தினால் விசேட கழிவு வழங்கப்படவுள்ளது.

ஜூலை முதலாம் திகதிக்கும் செப்டெம்பர் 30 ஆம் திகதிக்கும் இடையில் கடனையும் வட்டியையும் முழுமையாகத் திருப்பிச் செலுத்தும் வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1984 ஆம், 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூன்று சதவீத வட்டியில் கடன்பெற்றவர்களுக்கு 35 சதவீதக்கழிவும் —

ஆறுசதவீத வட்டியில் கடன் பெற்றவர்களுக்கு 25 சதவீதக் கழிவும் —

பத்துச் சதவீத வட்டியில் கடன்பெற்றவர்களுக்கு 20சதவீதக்கழிவும் —

பன்னிரண்டு சதவீத வட்டியில் கடன் பெற்றவர்களுக்கு 17 சதவீதக் கழிவும் —

இருபது சதவீதவட்டியில் கடன் பெற்றவர்களுக்கு15சதவீதக் கழிவும்—வழங்கப்படும்.

1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடன் பெற்றவர்களுக்கு 12 சதவீதக் கழிவு வழங்கப்படவுள்ளது.

உரிய கடன் தொகையும் வட்டியும் கணிப்பீடு செய்யப்பட்டு மொத்தத் தொகையில் கழிவுகள் வழங்கப்படும் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் சு. மாசிலாமணி தெரிவித்தார். (ஐ-11)

## சிறுவர் கல்வி விவரம் சேகரிப்பு

தென்மராட்சி, ஒக. 22

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினர் பளைப் பிரதேசத்தில் உள்ள சிறுவர்களின் கல்வி சம்பந்தமான விவரங்களைத் திரட்டி வருகின்றனர்.

பிரதேசத்தில் ஐந்து வயதுக்கும் 18 வயதுக்குமிடையயில் உள்ள சிறுவர், சிறுமியரின் விவரங்களை அந்தந்த கிராம அலுவலர் பிரிவுகளில் நேரடியாகச் சென்று சேகரித்து வருகின்றனர்.

வறுமை காரணமாக கல்வியைத் தொடர முடியாத சிறுவர் சிறுமியர்களின் கல்வி வசதியை வளம் படுத்த முயற்சிகள் மேற்கொள்ள விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## அறுபத்து மூவர் மடத்தில் அன்னதானம்

நல்லூர் ஸ்ரீ கந்தன் கிழக்கு வீதியில் அமைந்திருக்கும்மிகப் பழைமை வாய்ந்த அறுபத்து மூன்று நாயனார் குருபூசை மடத்தில் நல்லூர் முருகப் பெருமானின் உற்சவ காலத்தில் தினமும் அன்னதானம் நடைபெற்று வருகிறது. [ஐ-30]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ST. JOHN'S COLLEGE
JAFFNA
## CHUNDIKULI GIRLS' COLLEGE
JAFFNA
## ADMISSION - 2000

1. பின்வரும் வகுப்புகளில் வெற்றிடங்கள் உள்ளன. தரம்1, தரம் 6.
2. அ) விண்ணப்பப்படிவங்களை அவ்வக் கல்லூரிகளி லிருந்து 01—09—1999 முதல் 15—09—1999 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ) எக்காரணம் கொண்டும் 15—09—1999 க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப் படா.
   இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
   ஈ) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 21—09—1999. அத்திகதிக்குப் பின் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக் கப்படமாட்டா.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப் பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படலாம்.
4. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி(போட்டோ ஸ்ரற் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறை யும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை அவ்வக் கல்லூரி களில் பெற்றுக் கொள்ளலாம்.
6. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 250
7, வயதெல்லைகள்:
   அ) தரம் ஒன்று : விண்ணப்பதாரி 1-2-1994க்கும் 31—01—1995 க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) தரம் ஆறு ; விண்ணப்பதாரி 01—02—1989 இல் அல்லதுஅதற்குப்பின் பிறந் திருத்தல் வேண்டும்.
8. பிரவேசப் பரீட்சை :
   தரம் ஆறு வகுப்புக்கு 09-10-99 காலை 9.00 மணிக்கு ஆரம்ப மாகும்.
9. ஏனைய வகுப்புக்கான விண்ணப்பங்களையும் காரி யாலயத்தில் இதே நாள்களில் பெற்றுக் கொள்ள லாம். பரீட்சை மார்கழியில் நடத்தப்படும்.

விவரங்கள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

– அதிபர்கள்

(சி/8397)


## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஒக. 23

உரும்பிராய் கலைவாணி சனசமூகநிலையத்தின் ஆதர வில் உரும்பிராய் லயன்ஸ் கழ கத்தினரால் நடத்தப்படும் மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9–30 மணிக்கு ஊரெழு கணேசா வித்தியாலயத்தில் நடைபெறும்.

லயன் டாக்டர் சி. இந்திர ராசா தலைமையில் டாக்டர் களாலும் மருத்துவபீடமாண வர்களாலும் இந்த முகாம் நடத்தப்படும். லயன் எஸ். எம். பெர்னான்டோவினால் கண் பரிசோதனை செய்யப் படும்.

அதைத் தொடர்ந்து கணேசா வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட கட்டடத் தைத் திறந்து வைக்கும் வைப வமும் இடம்பெறும். (ஐ-ரி)

## சீனி, அரிசி விநியோகம்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தமது கிளைகள் மூலம் 'உ' பங்கீட்டு அட்டைக்கு அரிசி, சீனி என் பவற்றை இவ் வாரம் முதல் வழங்கி வருகின்றது.

ஒரு அட்டைக்கு 10 கிலோ குத்தரிசி கிலோ 30 ரூபா விலையிலும், இரண்டு கிலோ சீனி கிலோ 26 ரூபா விலை யிலும் வழங்கி வருகின்றது.

[ஐ-152]

## விமர்சன அரங்கு

'தாயகம்' கலை இலக்கிய சஞ்சிகையின் விமர்சன அரங்கு இன்று முற்பகல் 9 மணிக்கு பலாலி ஆசிரியர் கலாசாலையில் நடைபெறும்.

கவிஞர் இ. முருகையன் தலைமையில் நடைபெறும் இவ் விமர்சன அரங்கில் கவிதைகள் பற்றி வே. அம்பி கைபாகனும் சிறுகதைகள் பற்றி வீ. இரவீந்திரசர்மா வும், கட்டுரைகள் பற்றி க. சிவகரனும் நூல்வடிவம் பற்றி க. ரதீதரனும் விமர்சன உரைகளை நிகழ்த்துவர்.

(ஐ-27)


ALL PURPOSE MULTI DIRECTIONAL
KOBE-52

TV/RADIO ANTENNA
பொருத்துவதற்கு இலகுவானது
- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்ட்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax : 437736
10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junction,
Colombo 4. Tel : 589992
AVAILABLE ISLANDWIDE

(சி/8586)



## ENGLISH&SINHALA CLASSES

G.C.E [A/L]பரீட்சை முடிவடைந்தபின் ஆரம்பமாகவுள்ள புதிய ஆங்கில/சிங்கள வகுப்புக்களில் சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

பிரத்தியேக வகுப்புக்களும் ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

T. SAGATHEVAN B, A. Lond.

46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்,

(68349)



## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் (கொடிகாமம்) 2500 க்கு மேலான வெற்றுச் சாக்குகளும், 3000 க்கு மேலான வெற்றுப் பைகளும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றது. ரூபா 150 முற்பணம் கட்டிக் கேள்விப் பத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். 08—09—99 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங் கள் ஏற்றுக்கொள்ளப்படும். பொருள்களைச் சங்கத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்
தென். கிழக்கு ப.நோ.கூ. சங்கம்,
கொடிகாமம்,

16—08—99 [சி/8540]



கடந்த 32 ஆண்டுகளுக்கு மேலாக
உங்கள் நன்மதிப்பைப் பெற்றது

காவடி மார்க் கற்பூரம்

நின்று நிலைக்கும் ஜோதிமயம்
காவடி கற்பூரம் என்றும் தரும்




கற்பூரம் என்று கேட்காதீர்கள்
"காவடி" என்று கேட்டுவாங்குங்கள்

ஏக விநியோகத்தர்கள்
பிரபா டிரேடிங் கம்பனி
31, கபோஸ் லேன், கொழும்பு 11.
தொலைபேசி: 329426, 422750
(சி/8553)


+

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



திருமதி
### றீற்றா சரஸ்வதி துரைசிங்கம்
(ஓய்வு பெற்ற பிரதம தாதிய உத்தியோகத்தர், மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி)

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அரவணைப்பில் |
|---|---|
| 29 10–1930 | 23–07–1999 |

எங்கள் குடும்பத் தலைவி திருமதி றீற்றா சரஸ்வதி துரைசிங்கம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பி யும் ஏனைய வழிகளில் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபிகள் அனைவருக்கும் எமது உளங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். (22—08—1999) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல் லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

கணவன் (சி. துரைசிங்கம்),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

"அமலகிரி"
பெரியமாவடி வீதி,
சாவகச்சேரி.

(68338)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## நடுவு நிலைமை அவசியம்

கொழும்பில் நாளாந்தம் ஏதோ ஒரு பேரணி அல்லது ஆர்ப்பாட்டம் நடைபெறும் 'சீசன்' இப்போது நடந்து கொண்டிருக்கிறது. ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் அவரவர் கருத்தை, கோரிக்கையை வெளிப்படுத்துவதற்குச் சிறந்த ஜனநாயக வழி. அது ஒருவகை சாத்வீகப் போராட்டமும் ஆகும்.

குறிப்பிட்ட ஒரு சாரார் தமது கருத்துக்கு ஆதரவு திரட்டியும் அல்லது ஆதரவு தெரிவித்தும், அதே போல அடுத்த தரப்பின் கருத்துக்கு அல்லது நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அல்லது எதிர்ப்புச் சேர்த்தும் பேரணிகளை நடத்துகிறார்கள்.

ரயில் பிந்தி வந்தது என்பதற்காக சில பிரயாணிகள் சேர்ந்து ரயில்வே அதிகாரிகளைத் தாக்கினார்கள். தம்மைத் தாக்கியதற்கு ஆட்சேபம் தெரிவித்து ரயில்வே அதிகாரிகள் வேலை செய்ய மறுத்தார்கள் —

அதனால் ரயில்சேவை பாதிக்கப்பட்டது. உடனே ரயில் பயணிகள் ரயில்வே நிலையத்திலிருந்து வெளியே வந்து பஸ்களோ ஏனைய வாகனங்களோ செல்லமுடியாதவாறு வீதியில் குந்தி இருந்து மறியல் செய்தனர் —

அதன் விளைவாக வேலை முடிந்து பிரயாணிகள் ரயிலிலும் செல்ல முடியவில்லை; ஏனைய வாகனங்களிலும் வீடு செல்ல முடியவில்லை.

ஒரு சில பிரயாணிகளின் அடாத்தான செயற்பாடும் அதனைத் தொடர்ந்து ரயில்வே அதிகாரிகளின் ஜனநாயக நடவடிக்கையும் ஆயிரக்கணக்கான பயணிகளை வேலை முடிந்து மாலையில் வீடு செல்ல முடியாது தடுத்தது; அவதிப்பட வைத்தது.

சாத்வீகப் போராட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டால் ''பூமராங்'' போன்று பாதிக்கப்பட்டவர்களையே அது திரும்பவந்து தாக்கும். கொழும்பில் இப்போது நடைபெறும் சாத்வீகப் போராட்டங்களில் — அதாவது ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளில் — மிக பெரும்பாலானவை அரசியல் நோக்கங்களை எய்துவதற்காகவும் அதற்கு மேலாக அரசியல் போட்டிகளையும் அடிப்படையாகக் கொண்டவையே,

அரசு சாராத ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை ஏதோ ஒரு காரணத்தைக் கூறி சட்டத்தை அமுல் செய்யும் அதிகாரிகள் தடுக்க முயல்கிறார்கள். அதனால் சாத்வீகப் போராட்டம் குழப்பத்திலும் வன்முறையிலும் முடிகிறது. பலர் காயமுறுகிறார்கள்.

அமைதியான போராட்டம் — சாத்வீகப் போராட்டம் — வன்முறையாகி மக்கள் பாதிக்கப்படுவது குளிக்கப் போய் சேறு பூசுவது போலாகும். இதனால் கொழும்பில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படுவது மட்டுமன்றி மக்களுக்குரிய பாதுகாப்பும் கேள்விக் குறியாகிறது.

அரசு நடத்தும் பேரணிகள் சாத்வீகம் சார்ந்தவை என்றும், அதனால் அமைதிக்குப் பங்கம் ஏற்படாது என்றும் முடிவு செய்யும் பொலிஸார் —

அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் வன்முறையில் முடியும் என்று கணக்குப் போடுவது பெருந்தப்பு. ஜனநாயகத்துக்கு விரோதமானதும் ஆகும்.

பொலிஸார் ஒருதலைப்பட்சமாக முடிவு செய்வதன் மூலம், சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்குப் பதிலாக, வன்முறைக்கு வழி செய்வதே மிச்சமாகும். அவர்களிடம் நடுவு நிலைமை இல்லாவிடில் கொழும்பு நாளாந்தம் எரிமலையாகும் ஆபத்து உண்டு.

# கடவுளுக்கு செவி கொடுக்கும் போது நம் வாழ்வின் அவலநிலை நீங்கிவிடும்

மனித வாழ்க்கை என்பது எப்படியும் வாழலாம் என்றில்லாதபடி இப்படித்தான் வாழ வேண்டும் என்று சீர் தூக்கிப் பார்த்து வாழ வேண்டியதே வாழ்க்கை.

எப்படியும் வாழலாம்என்று வாழ்க்கை நடத்தும் மனிதன் வாழ்வின் பெரும் பகுதியை தன்னுடைய அவல வாழ்வுக்குள் செலுத்திச் செல்கின்றான். அவன் தன் அயலானுக்கு நற்சாட்சி அற்றவனாகவும் தன் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் பெரும் தீங்கிழைத்தவனு மாகிறான்.

எனவே ஒரு குடும்பத்தில் இருந்து புறப்படும் நற் சாட்சியானது, அக் குடும்பத்தின் தலைவன், தலைவி, பிள்ளைகள் அனைவரினதும் நற் பண்புகள், அயலவர்கள் மத்தியில் பெரியதொரு ஈர்ப்பு சக்தியை உண்டுபண்ணுகிறது.

அவர்களைப் போன்று நாமும் நற் பண்புள்ள குடும்பமாக வாழ வேண்டும் என்ற அயலவனின் உதாரணத்திற்கும் அவர்கள்ஆளாகிறார்கள் இத்தகையோர் இப்படித் தான் வாழ வேண்டும் என்ற இலட்சிய வாழ்க்கையை நடத்துபவர்கள்.

இங்கேநாம் பரிசுத்த வேதாகமத்தின் உபாகமம் 5ஆம் அதி

### ஞாயிறு நற்பிரசாதம்

காரம் 10 ஆம் வசனத்தைப் பார்ப்போமானால் என்னிடத்தில் அன்பு கூர்ந்து என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகின்றவர்களுக்கோ ஆயிரம் தலை முறை மட்டும் இரக்கம் செய்கிறவராய் இருக்கின்றேன்.

மேலும் 6 ஆம் அதி. 3 ஆம் வசனத்தின் படி கடவுளின் ஆலோசனையைக் கேட்போமாகில் இஸ்ரவேலே நீ நன்றாய் இருப்பதற்கும் உன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் நீ மிகவும் விருத்தியடைவதற்கும் அவைகளுக்குச் செவி கொடுத்து அவைகளின் படி செய்யச் சாவதானமாய் இரு.

ஆம்; அன்பானவர்களே! கடவுள் எதற்குச் செவி கொடுக்கச் சொல்லுகிறாரோ அவைகளுக்கு நாம் செவி கொடுக்கும் போது நம் வாழ்க்கையில் உள்ள அவல வாழ்வு நீங்கும் அயலவனின் பொழுது ''ஈதல் இசை பட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு'' என்ற வள்ளுவரின் வாய் மொழியையும் நம் சிந்தனைக்கு எடுப்போமானால் ஆண்டவராகிய இயேசு சுவாமி, தம்மை அண்டி வந்தோர்க்கெல்லாம் அருளின் மாமழையைப் பொழிந்தார். உடல், பொருள், ஆவி அனைத்தையும் உலகுக்கே உவந்தளித்தார்.

அத்தகைய உரிமையுடன் ஆண்டவர் இயேசு சுவாமி மனுக்குலத்துக்கு அழைப்பு விடுக்கின்றார். 'நான் பரிசுத்தராக இருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்' என்றார்.

அவருடைய அழைப்பை ஏற்று நறுமணங் கமழும் மலராக நற்சாட்சியுடைய குடும்பமாக வாழ்வோம். எப்படியும் வாழலாம் என்றில்லாத

**சகோ. க. திருவம்பலம்**

நற்சாட்சியுள்ள மகனாக, மகளாக நற்குடும்பமாக நாம் மிளிருவோம்.

வந்தோம், வாழ்ந்தோம், எதைச் சாதித்தோம் என்ற சிந்தனைக்குள் நாம் புகும்படி, இப்படித்தான் வாழ வேண்டும் என்று உலகுக்கு ஆண்டவர் அருளிய திருச் சட்டத்தின் படி வாழ்ந்து பயனடைவோமாக.

★

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக. 22

இருபாலை கற்பகப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆயிரத் தெட்டுச் சங்காபிஷேகம் நடைபெற்று விஷேட பூசைகள் இடம் பெறும்.

இன்று காலை 6 மணிக்கு சமய தீட்சையும் இடம் பெறும். (க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ். புனித ஆரோக்கிய நாதர் ஆலயத்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 5 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு நற்கருணை வழிபாடும், மறுநாள் காலை 7.00 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். (க-ரீ)

★ ★ ★

சாவகச்சேரி, ஓக. 22

அல்வாய் வடமேற்கு துந்தாவத்தை அருள் மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் (துளாயில் பிள்ளையார்) தேவஸ்தானத்தின் மகாகும்பாபிஷேக விழா எதிர்வரும புதன் காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகம் பிரதிஷ்டா பிரதம குரு சித்தாந்த பண்டிதர்-சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (க-31)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 22

கோண்டாவில் குமர கோட்டம் சித்தி வைரவர் அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தேர் உற்சவமும் மறு நாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

27 ஆம் திகதி ஆயிரத் தெட்டு சங்காபிஷேகம் நடைபெறும். (க-30)

★ ★ ★

வலிகாமம் தெற்கு, ஓக. 22

ஈவினை மத்தி ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தின் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 7.28 மணிக்கு நடைபெற உள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் இம் மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகும். 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறும்.

கும்பாபிஷேகத்திலன்று நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் ஆசி உரையும் —

வ. குமாரசாமி ஐயாவின் அருளுரையும் இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று. ஆவணிச் சதுர்த்தி தினமான செப்ரெம்பர் 13 ஆம் திகதி 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து மறுநாள் செப்ரெம்பர் 14 ஆம் திகதி காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி செப்ரெம்பர் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (152)

### நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர்க்கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி இளங் கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசை அரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணி முதல் 7-00 மணி வரை சக்தி தேவி சிவகுமாரின் இசைக் கச்சேரி நடைபெறும். இதற்கு அணிசேர் கலைஞர்களாக சாந்தநாயகி சுப்பிரமணியம் (வயலின்), எஸ். துரைராஜா (மிருதங்கம்), வீ. ரமணன் (கடம்) ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-ரி)

★ ★ ★

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ கந்தன் ஆலய உற்சவத்தை ஒட்டி நல்லூர் சைவ மகா சபை நடத்தும் தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.15மணி தொடக்கம் நடைபெறும்.

இந்நிகழ்வில் 'கானகதாவாரிதி' பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா பக்கவாத்திய சகிதம் ''திருத்தொண்டர் புராணத்தில் மனுநீதி கண்ட சோழன்'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார். [ஐ-30]

### நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## பொல்லா நிலையினைப் போக்கு!

நல்லை நகரிருந்து நாற்றிசையு மருள்பரப்பி
தொல்லைவினை களையும் தூயவனே—எல்லை
இல்லாத்துயரில் எந்நாளுந் தவித்திடு மெம்
பொல்லா நிலையினைப் போக்கு


— அன்னைதாசன்

## பெரு மூச்சு இனிப் போதும்...!

முருகா உன் மௌனம் ஏனோ?
இது முடிவிலாப் போரென்ப தாலோ?
எது வேண்டும் தமிழர்க்கு இங்கு
இது காறும் புரியாத நிலையோ?

தெருவெங்கும் முள்வேலி கண்டாய்
தமிழ்த் தேசமே செம்மணியாகுது பார்த்தாய்
பெருமூச்சு இனிப்போதும் முருகா!
அதனால் ஒரு மூச்சு நிம்மதி இம்மண்ணில்
சேர்ப்பாய்!

— நெடுந்தீவு லக்ஸ்மன்



## வறுமைப் பிணிக்கு மருந்து

இராகம் —சங்கராபரணம் தாளம் — ரூபகம்

வாசம் பொருந்திய மாமலர்ச் சோலையில்

வந்து குயில் கூவும்

மற்ற மாதரும் நாடக மாதரும்

வந்து மகிழ்ந்து வணங்கிடுவார்

— யோகர் சுவாமிகள்

### உதயவாக்கு

ஆண்டவனை நம்புவோனது உள்ளத்திலிருந்து ஆண்டவன் அச்சத்தை அகற்றி விடுவான்

— சாந்தி அடிகள்

## நாளை

ஆவணி 6

திங்கட்கிழமை

திதி: துவாதசி

பின் இரவு 4-30 வரை

நட்சத்திரம்: பூராடம்

முன் இரவு 9.54 வரை

சுபநேரம்: 12 05—1 35

ராகுகாலம்: 7.35— 9 05

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர் கைதுகளில் இருந்து தம் பிள்ளைகளை பொத்திப் பாதுகாக்கும் நிலையில் பெற்றோர்கள்

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காண வர்த்தக சம்மேளனம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அதே வேளை ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியையும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியினையும் ஒரே மேடையில் சந்திக்க வைத்து இதற்கான இணக்கப்பாடான ஒரு நிலையினைக் காண முயன்று வருகின்றது.

இன்றைய கொடூர யுத்தம் தமிழ் இளைஞர்கள் யுவதிகளின் உயிரைக் குடிக்கும் அரக்கத்தனமான நடவடிக்கையாக மாறிவரும் வேளை தங்கள் கணவன்மாரும், பிள்ளைகளும் இந்த யுத்தத்தின் விளைவாக மாண்டு மடியும் நிலையினைக் கண்ட போதுதான் இந்தக் கொடூர யுத்தத்தினைச் சாட்டாக வைத்து கொண்டு பேரினவாத அரசியல் வாதிகள் சித்து விளையாட்டு விளையாடுவதனைச் சிங்கள இனமும் கண்டு கொண்டது.

கடந்த இரண்டு தசாப்த காலமாகத் தமிழன் என்றால் பயங்கரவாதி, தீவிரவாதி என்ற சிந்தனைகளையும் சிங்கள இனத்தின் மத்தியில் இந்த யுத்தம் தொடர்பான யுத்த நடவடிக்கைகள் வித்துக்களாகத் தூவப்பட்டிருந்தன. ஆனால் யுத்த நடவடிக்கைகளினால் மாண்டு மடியும் தங்களின் பிள்ளைகளின் இரத்தமும் சிந்தப்பட்டபோதே சிங்கள இனமும் விழித்துக்கொண்டது.

இதனைத் தொடர்ந்தே காணாமற்போன படையினரின் பெற்றோர், உறவினர் சங்கம் எமது குரல் என்ற அமைப்பினைக் கொண்டு பதினைந்துக்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் சமூக நல நிறுவனங்களும் விழித்துக்கொள்ளத் தொடங்கின. வடக்கிலும் கிழக்கிலும் சிந்தப்படும் இரத்தம் தமிழர்களினுடையது மட்டுமல்ல தென்னிலங்கையின் பின்தங்கிய கிராமங்களில் வாழும் அப்பாவிக் கிராமவாசிகளான சிங்கள சிப்பாய்களின் இரத்தமும் என்பதனைப் புரிந்துகொண்டனர். இந்த நிலையிலேயே இந்தக் கொடிய யுத்தத்தினை எதிர்த்து வடக்கு — கிழக்கிலும் வன்னிப் பெருநிலப்பரப்பில் மட்டுமன்றி இலங்கையின் தலைநகரான கொழும்பிலும் ஆர்ப்பாட்டப் பேரணிகளும் ஊர்வலங்களும் கண்டனக் கூட்டங்களும் இடம் பெறத் தொடங்கியுள்ளன.

இனப்பிரச்சினைக்கான யுத்த முனைப்புகளின் வரலாற்று ரீதியான நிலைகளில் இந்த நடவடிக்கைகள் புதிய அத்தியாயத்தினைத் தோற்கடித்துவிட்டன, அரசியல் சித்தாந்த ரீதியாக இது பேரினவாத அரசியல் வாதிகள் மீதான பலத்த தாக்குதல் என்றே கூறவேண்டும்.

திருமலைத் திருமுகம்
— சங்கீத் —

உலகில் எங்குமே இல்லாத வகையில் இலங்கையில் தான் யுத்தத்தின் மூலம் சமாதானம் என்ற கோஷம் எழுப்பப்பட்டு அது இன்று நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இது வேடிக்கையும் வினோதமும் நிறைந்த நிகழ்வாகும்.

வன்னிப் பெருநிலப்பரப்பிலும் வடக்கிலும் யுத்தமுனையில் செயற்பட்டுக்கொண்டிருந்த விடுதலைப்புலிகள் கடந்த சில வாரங்களாக கிழக்கில் மீண்டும் தமது தாக்குதல்களை ஆரம்பித்துள்ள வேளை திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் குண்டுகள் வெடிக்கத் தொடங்கியதுடன் சைக்கிள் குண்டுத் தாக்குதல்களும் ஆரம்பமாகி உள்ளன.

இத்தகைய நடவடிக்கைகள் படையணிகளை சற்றே அதிர்ச்சியடைய வைத்துள்ளன என்றே கூறவேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வழமையாக படையினரின் வாகனத் தொடரணி வாராந்தம் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் இடம் பெறுவது வழமையானதாகும். இந்த வாகனத் தொடரணியினைப் பொறுத்தவரை இடமாற்றத்தின் காரணமாகவோ அன்றி விடுமுறையின் பொருட்டோ பன்னிரண்டுக்கும் பதினைந்துக்கும் உட்பட்டதான வாகனங்களில் பொலீஸார், தரைப் படையினர் மற்றும் விமானப் படையினரை ஏற்றிக் கொண்டு கொழும்பு செல்வது வழமையான நிகழ்ச்சிகளாகும்.

அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் இந்தவார ஆரம்பத்தில் இத்தகைய வாகனத் தொடரணியின் பாதையினையே திடீரென மாற்றி விட்டது. குறிப்பாக நகரின் மையப் பகுதிகளினூடாகச் சென்ற இந்த வாகனத்தொடரணி திடீரென புறநகர்ப்பகுதிகளினூடான பாதைகளினூடாக நகரப் பகுதியைவிட்டு வெளியேறிக் கொழும்பு நோக்கிச் சென்று வருகின்றன.

ஆனால் இதே போன்று கடந்த வெள்ளியன்று மட்டு நகரிலிருந்து கொழும்பு செல்ல வேண்டிய படையினரின் வாகனத் தொடரணி அன்றைய தினம் இடம் பெறவில்லை.

இந்த நிலையில் தான் கிழக்கிலங்கையில் விசேட அதிரடிப்படையினரும் கறுப்பு சீருடை தரித்தோரும் பொலீஸாரும் தேடுதல்களையும் சோதனைகளையும் மேற்கொண்டு வகை தொகையற்ற நிலையில் பாடசாலை மாணவர்களையும் இளைஞர், யுவதிகளையும் கைது செய்து வருகின்றனர்.

வீதி வழியே டிரக் வண்டிகளிலிருந்து திடீரென கீழே குதிக்கும் படையினர் திடுதிப்பென்று வீதியால் சைக்கிளில் செல்லும் இத்தகைய பாடசாலை மாணவர்களையும் இளைஞர், யுவதிகளையும் ஏனையோரையும் அவர்களது சைக்கிள் வண்டிகளைக் கூட அநாதரவாக வீசிவிட்டு அடிமைகளைப் போன்று தமது வாகனங்களில் கொண்டு செல்கின்றனர்.

இத்தகைய நிலைகளினால் மட்டக்களப்பு நகரம் பிற்பகல் மூன்று மணியளவிலேயே அடங்கி விடுகின்றது. இளைஞர்களும் யுவதிகளும் மாணவர்களும் இன்று வீதியால் செல்லவே அச்சமுறுகின்றனர். கறுப்புச் சீருடையினர் தம்மையும் அள்ளிச் சென்று விடுவரோ என்ற அச்சம், பய உணர்வு இளையதலைமுறையினரை மட்டுமன்றி நகரவாசிகள் அனைவரையும் ஆட்கொள்ளத் தொடங்கி உள்ளது.

இன்று வயது வந்த பாடசாலைமாணவமாணவியரைக் கூட அவர்களது பெற்றோர் பாட்சாலைகளுக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இருபத்தோராம் நூற்றாண்டில் உலகம் நாகரிகத்தின் உச்சக் கட்டத்தை எட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதாக பெருமை பேசுகின்றது. ஆனால் நமது நாட்டைப் பொறுத்த வரை நமது பெற்றோர் தமது பிள்ளைகளைப் பொத்திப் பொத்தி வளர்க்க வேண்டிய நிலை மீண்டும் உருவாகி விட்டது. ஒரு கால கட்டத்தில் மூட நம்பிக்கைகளில் திளைத்து பேய் பூதம் பிசாசு என்று அஞ்சிய மனித இனம் குறிப்பாக தமிழர்கள் இன்று படையினரைக் கண்டால் பேய், பூதம் போன்று பயந்து ஓட வேண்டிய நிலை உருவாகி விட்டது. ★

## சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# ஈழத்தில் வாழும் உறவினருக்காக இறைவனைப் பிரார்த்தியுங்கள்

## விம்பிள்டன் விநாயகர் தேர்த்திருவிழாவில் வேண்டுதல்

★ ஈழத் திருநாட்டில் வாழும் உங்கள் உறவினர்களுக்காக இறைவனை இரு கரம்கூப்பிப் பிரார்த்தியுங்கள்; மன்றாடுங்கள்.

— கடலுக்குக்கூட இவ்வுலகில் எல்லை வைத்த கடவுள் எமது இனத்தின் கண்ணீருக்கு எல்லை வைக்கமாட்டாரா?

★ சைவத்தமிழர்கள் லண்டனுக்கு வருமுன்பே சைவத் திருத்தெய்வங்கள் இங்குவந்து விட்டன.

லண்டன்விம்பிள்டன் விநாயகர் ஆலய தேர் உற்சவத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய 'செஞ்சொற் செல்வர்' ஆறு. திருமுருகன் தமது உரையின் போது முன் கண்ட இரு அம்சங்களையும் முதன்மைப்படுத்தினார்.

அகில உலக இரண்டாவது சைவமாநாடு லண்டனில் சிறப்பாகநடைபெற்றுமுடிந்த கையோடு சடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற லண்டன் விம்பிள்டன் ஸ்ரீ கணபதிஆலய தேர் உற்சவமானது ஈழத்துப் பிரபல ஆலயங்களின் திருவிழா போன்று கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

பக்தர்கள் புடைசூழ விம்பிள்டன் வீதிகளில் விநாயகர் தேரேறிவந்து காட்சிகொடுத்தது அற்புதமானகாட்சி. இந்துக்கள் வாழுகின்ற இடமெல்லாம் சைவத்திருக்கோயில்கள் அமைவதுடன் பக்திவெள்ளம் கரைபுரண்டு ஓடும்என்பதற்கு இந்தத் தேர்விழா சான்றாக அமைகிறது எனலாம்.

உலகச் சைவமாநாட்டில் கலந்து கொள்ளுமுகமாக யாழ்ப்பாணத்திலிருந்து லண்டன் வந்து இங்கு தீவிர சமய சொற்பொழிவுகள் நடத்தி வரும் ஆறு. திருமுருகன் இங்கு தொடர்ந்து பேசுகையில்;

சைவ சமயத்தவர்களின் முதல் தெய்வம் விநாயகர். கடல் கடந்து வாழும் சைவத் தமிழர்களாகிய நீங்கள் பாரம்பரியமான வழிபாட்டு மரபையும் சைவ பண்பாட்டையும் காப்பது சைவ உலகுக்கு பெரும் வரப்பிரசாதமாகும்.

பிரித்தானிய மண்ணில் விநாயகருக்கு மகத்தான கோயில் எழுப்பி இன்று தேர்த்திருவிழா காணும் நீங்கள் உங்கள் நாட்டு குல தெய்வங்களை நினைத்து இவ்

லண்டனிலிருந்து
சுதா

விடத்தில் வழிபாடு செய்கிறீர்கள்.

எமது முன்னோர்கள் எத்தனையோ இன்னல்கள் வந்த வேளையிலும் கூட கடவுள் வழிபாட்டைக் கைவிட்டதில்லை. குறிப்பாக ஈழநாட்டில் 1505 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த போர்த்துக்கேயர் அனைத்து சைவத் திருக்கோயில்களையும் அழித்தனர். வழிபாட்டு சுதந்திரத்தையும் மறுத்தனர்.

எனினும் எம்மவர்கள் மரப்பொந்திலும், கிணற்றுக்குள்ளும், குளத்துக்குள்ளும் இன்று விக்கிரகங்களைப் போட்டு விட்டு மறைமுகமாக வழிபாடு செய்தனர். தாம் வாழும் இருப்பிடங்களிலும் இரகசியமாக இறை வழிபாடு செய்தனர். சுமார் 350 வருடங்களாக ஆலயங்கள் எழுப்பும் சுதந்திரம் இல்லாமல் வாழ்ந்த போதிலும் தம் சமய வழிபாட்டையும் தமிழ் பண்பாட்டையும் நம் சந்ததியினர் பாதுகாத்துக் கொடுத்தனர்.

இத்தகைய பாரம்பரிய வரலாறுகளை சைவ சமயத்தவர்களாகிய நாம் நன்கு உணர வேண்டும்.

புலம் பெயர்ந்து இவ்வளவு மக்கள் வாழுகின்ற போதிலும் அங்கெல்லாம் சைவ ஆலயங்கள் எழுவதும் வழிபாடு நடப்பதும் போற்றுதற்குரியது. ஆங்கிலப்பெரு நாட்டில் இத்தனையாயிரம் பேர் கூடி நின்று வடம் பிடித்து தேர் இழுத்து 'அரோகரா' 'அரோகரா' என்று ஓசை எழுப்பி இறைவனை வழிபடுவது உண்மையிலேயே அற்புதம்.

கங்கை, யமுனை, காவேரி என்ற புண்ணிய நதிகள் போல் இன்று தேம்ஸ் நதியும் சைவத் தமிழர்களை வாழ்விக்கிறது. சைவத் தமிழர்கள் பிரித்தானியாவுக்கு வருவதற்கு முன்பே சைவத் திருத் தெய்வங்களை ஈழ நாட்டிலும், இந்தியாவிலும் இருந்து பிரித்தானியர்கள் பெயர்த்து எடுத்து வந்து தங்கள் நூதன சாலையில் இருத்தினர். லண்டன் மாநகரில் அமைந்திருக்கும் நூதன சாலையில் [illegible] விக்கிரகங்களை இன்று நாம் காணக்கூடியதாக உள்ளது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

★ ஒரு சிகரெட்டினைப் புகைக்கும்பொழுது புகைப்பவரது ஆயுள் ஆறு நிமிடத்தால் குறைக்கப்படுகின்றது

★ புகைப்பிடிக்காதவர்களின் ஆயுளைவிட புகைப்பிடிப்பவரின் ஆயுள் ஏழு ஆண்டுகளால் குறைகின்றது.

★ மூன்று சிகரெட்டின் புகையிலையினது நச்சுப் பொருளான ''நிக்கொற்றினை'' பிரித்தெடுத்து ஊசி மூலம் அதனை ஒருவருக்கு ஏற்றினால் ஏற்றப்படுபவர் உடனே இறந்துவிடுகின்றார்.

★ புகைப்பிடிப்பதால் இருதயம், இரத்தச் சுற்றோட்டம், கண்பார்வை, கருத்தரித்தல், ஆண்மை இவற்றின் தொழிற்பாடு படிப்படியாகப் பாதிப்படைகின்றது. நுரையீரல் புற்றிற்கும் இதுவே துணை நிற்கின்றது.

★ ஒவ்வொருநாளும் ஐம்பது வயதினை எட்டும் வரைக்கும் ஒரு பக்கெற் சிகரெற் குடித்துவருவீர்களானால் புகைப்பிடிக்காத அந்த வயதுடைய நபரைக் காட்டிலும் அடுத்துவரும் 18 மாதங்களுக்கு உள்ளாக மரணமடையும் வாய்ப்பு புகைப்பிடியாதவரின் வாய்ப்பினைவிட இருமடங்காகும்.

★ புகைப்பிடிப்பவர் தனக்குமட்டுமன்றி வெளியில் இருப்பவர்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றார்.

★ புகைப்பிடிக்கும் கர்ப்பிணிப்பெண் ஒருவர் தன்னை அறியாமலேயே தன் கருவிலுள்ள சிசுவுக்கு தீங்கிழைக்கிறார்.

★ தற்போது அரச அலுவலகங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் புகைப்பிடித்தலை இலங்கை அரசாங்கம் தடைசெய்துள்ளது.

டாக்டர் சார்லஸ் கேமரானின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மின் இழக்கும் ஆபத்து

கொஞ்சம் கொஞ்சமாகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிக்கும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியான வவுனியாவுக்கும் அவ்வளவு வித்தியாசம் இல்லாமல் போய் விடும்போலத் தெரிகிறது.

வன்னியில் நகர்ப்புறங்களுக்கு புலிகள் மின்சாரம் வழங்கியுள்ளார்கள் ஜெனரேற்றர்கள் மூலம். ஆனால் கிராமப்புறங்கள் இருளில் மூழ்கியுள்ளன. அதேபோல் வவுனியாவிலும் நகர்ப்புறம் மின்சாரம் தொடர்ந்து வழங்கப்பட கிராமப்புறங்கள் இருளில் மூழ்கப்போகின்றன.

வவுனியாப் பகுதியில் அடுத்தடுத்து இடம்பெறும் மின்மாற்றி குண்டுத் தகர்ப்புகளாலேயே தற்போது கிராமங்களுக்கான மின்விநியோகம் துண்டிக்கப்படப் போகிறது. அதிலும் ஏற்கனவே வீரபுரம், முதலியார்குளம், பூந்தோட்டம் கிராமத்தின் ஒரு பகுதி, பெரியார்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மின்மாற்றிகள் குண்டுத் தாக்குதலில் தகர்க்கப்பட்டதால் அந்தப் பகுதிகளுக்கு தொடர்ந்தும் புதிய மின்மாற்றிகளை வழங்க படையினர் அனுமதி மறுத்து விட்டனர். அதனால் அவை இருளாகிப் போய்க் கிடக்கின்றன.

வவுனியா மாவட்டத்தில் மொத்தம் 90 மின்மாற்றிகள் மின் விநியோகத்தில் ஈடுபடுத்

## இயந்திர ஆலை உரிமையாளர்கள் தலையில் கை வைக்கும் நிலை

தப்பட்டுள்ளன இவைகளில் 25 மின்மாற்றிகள் இதுவரை குண்டுவைத்துத் தகர்க்கப் பட்டுள்ளன. இதன் காரணமாக மின்சாரசபைக்கு ஒரு கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது இதனால் மின்மாற்றிகள் அனைத்துக்கும் படையினரின் பாதுகாப்புக் கோரப்பட்டது ஆனால் நகர்ப்புறப் பகுதியில் உள்ள மின்மாற்றிகளை பாதுகாக்க படையினர் தயாராக உள்ளனர். குக்கிராமங்களிலுள்ள மின்மாற்றிகளை பாதுகாக்க படையினர் தயாராக இல்லை ஏனென்றால் படைமுகாம்களை விட்டுத் தொலைவில் இருக்கும் மின்மாற்றிகளைப் பாதுகாத்தபடி படையினர் இருக்க — குண்டு வைக்க வென்று வருவோர் அவர்கள் மீதும் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற காரணத்தால் படையினர் அதற்கு இணங்கவில்லை. இந்தச் சிக்கலான பிரச்சினை பற்றி கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா படைத் தலைமையகத்தில் கூட்டமொன்று நடைபெற்றது. வவுனியா இணைப்பதிகாரி பிரிகேடியர் ஜயவர்த்தன தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வவுனியா மின்சார சபை அதிகாரிகளும் கலந்துகொண்டனர். இந்தக் குண்டுத் தாக்குதல்கள் பற்றி ஆராயப்பட்டபோது கிராமப்புறங்களில் உள்ள 19 மின்மாற்றிகளை அகற்றி பாதுகாப்பான ஓரிடத்தில் களஞ்சியப்படுத்தும்படி மின்சார சபையினருக்கு படையினர் உத்தரவு வழங்கியுள்ளனர். இந்த உத்தரவினாலேயே வவுனியாவின் கிராமப்புறங்கள் இருளில் மூழ்கக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் மொத்தம் 90 மின்மாற்றிகள் இருக்கின்றன. அவற்றில் 52 படையினரால் பாதுகாப்பு வழங்கப்படக்கூடிய இடங்களில் இருக்கின்றன. மற்றும் பம்பைமடு, பூந்தோட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள இரண்டு மின்மாற்றிகள் படையினரின் சோதனைச் சாவடிக்கு அருகில் இருக்கின்றன. அதனால் அந்தச் சோதனைச் சாவடியை சற்று நகர்த்தி குறிப்பிட்ட மின்மாற்றிகளைப் பாதுகாக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. மற்றும் சமளங்குளம், கோவில்குளம், ராசேந்திரகுளம் ஆகிய பகுதிகளிலுள்ள மின்மாற்றிகள் படையினரின் சோதனைச் சாவடிகளுக்கும் தமிழ் கட்சிகளின் முகாம்களுக்கும் அருகிலிருப்பதால் அவை அந்த இடங்களுக்கு மாற்றப்படப்போகின்றன. மிகுதியாக 5 மின்மாற்றிகள் அரிசி ஆலைகளின் உள்ளே இருப்பதால் அந்த அரிசி ஆலைக்காரர்கள் அவற்றைப் பாதுகாப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மீதமாக உள்ளதில் ஒன்று சின்னச்சிப்பிக்குளம் என்ற முஸ்லிம் பகுதியிலும், மற்றது கூளுக்குளமென்ற சிங்களப் பகுதியிலும் இருக்கின்றன. அந்தப் பகுதிகள் புலிகளின் நடமாட்டம் குறைந்த பகுதி. அதனால் குண்டு வைக்கச் சந்தர்ப்பமிருக்காது என்று சொல்லப்படுகிறது. மிகுதியாக நான்கு ஏற்கனவே குறிப்பிடப்பட்ட தகர்ப்புக்குள்ளான ஆனால் மீளப் பொருத்தப்படாத மின்மாற்றிகள். இவை தவிர 10 இன்னமும் பொருத்தப்படாதவை. இவை போக மிகுதியாகத் தற்போது 12 மின்மாற்றிகளே கழற்றப்பட வேண்டியவையாக உள்ளன. தவசிகுளம், பண்டாரிகுளம், மகாரம்பைக்குளம், சாந்தசோலை, மரக்காரம்பளை — பாவற்குளம், பூவரசங்குளம், செட்டிகுளம் வீதியில் இரண்டு, கலாசியம் பலாகஸ்வேவா என்ற சிங்கள எல்லைக் கிராமம், கூமாங்குளம், எல்லப்பர் மருதங்குளம், தோணிக்கல் ஆகிய பகுதியிலுள்ள 12 மின்மாற்றிகளுமே கழற்றப்பட

(8 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா வலம்
-ரா.இளவரசன்-

**சூரியகாந்தி**
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் பெருகிவரும் தலைநகர் கொழும்பு

இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பது வேலையில்லாத இளைஞர்களுக்குக் கொடுப்பனவு அல்லது வேலை வழங்குவது என்று வாக்குறுதிகள் பலவற்றைவாக்காளர்களிடம்பட்டியலாகக் கொடுத்துப் பதவிக்கு வந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஐந்தாண்டு இம்மாதம் 18 ஆம் திகதி முடிந்து 19 ஆம் திகதி ஆறாவது ஆண்டு பிறக்கின்றது. ஆண்டுகள் ஐந்து கழிந்தாலும் அரசாங்கத் தலைவர்கள் மீறிய வாக்குறுதிகளும் பேசிய பேச்சுகளும் போதுமானதே என்று எண்ண வேண்டிய நிலை.

ஐந்து வருட ஆட்சியின் விளைவாகப் போர் உக்கிரமடைந்து அப்பாவி மக்களின் உயிர்களுடன் அன்றாடம் விளையாடிக்கொண்டே இருக்கின்றது. உயிரற்ற பொதியொன்றை உறுதியான தீர்வாக உலகுக்குக் காட்டி அரசு ஏற்றும் அரங்கேற்றங்கள் சர்வதேச சமூகத்தின் பார்வையைத் தன் பக்கம் திருப்ப முயன்றாலும் நாட்டில் அவ்வப்போது இடம்பெறும் நிகழ்வுகள் புதிய வடிவங்களைப் பெறுகின்றன. எதிர்க்கட்சிகள் ஊர்வலம் நடத்தினால் அது சட்டவிரோதம்; ஆளுங்கட்சி நடத்தினாலோ அது ஜனநாயகம் என்ற தோற்றப்பாடு இலங்கை வரலாற்றில் பல் வேறுபட்ட காலப் பகுதிகளில் எழுந்தது.

பேரணிகளும்ஊர்வலங்களும் அவ்வாறு நடந்தேறஅதனால் இனவாதக் கோஷங்களும் தலை தூக்கத்தான் செய்கின்றன. கடந்த சில நாள்களாக ''வீரவிதாஹன'' அமைப்பு பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் என்ற போர்வையில் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை பதாகைகளாகவும், சுலோக அட்டைகளாகவும் சுவரொட்டிகளாகவும் தலைநகரில் காட்சிப்படுத்த முற்பட்டுள்ளது. அவற்றோடு நின்றதா? இல்லை.

பஸ் பஸ்ஸாக ஏறித்துண்டு பிரசுரங்களை விநியோகிக்கும் உத்திகளையும் கடந்த வாரத் தொடக்கத்திலிருந்து

**'ராகவன்'**

ஆரம்பித்துள்ளனர். இளைஞர்கள் பலரும் இதில் ஈடுபடுகின்றனர் பஸ்களில் ஏறிப் பிரசங்கப் பிரசாரத்தையும் முடுக்கிவிட ஆரம்பித்துவிட்டனர். தமிழ்மக்களை சாரும் வகையிலும் அவமதிக்கும் வகையிலும் அவை காணப்படுகின்றன. ஆனால் இவையெல்லாம் அரசின் பார்வைக்குப் படுவதாகத் தெரியவில்லை. இது இனவாதச் செயலாகக் கண்ணிற்படாமல் ஜனநாயக ரீதியான செயலாக அரசின் பார்வையில் படுவதற்கு பெரும்பான்மையினர் நடத்தும் இயக்கம் என்பதே காரணம்.

இது இவ்வாறிருக்க டிலான் பெரேராவின் வழிநடத்தலில் அமைக்கப்பட்டுள்ள எமது குரல் அமைப்பு கடந்த 12 ஆம் திகதி யுத்தத்தை நிறுத்தக் கோரியும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு வலியுறுத்தி பேரணி நடத்தியது. இம்மாத இறுதியில் ஒரு லட்சம் மக்கள் கலந்து கொள்ளும் மாபெரும் பேரணியை கொழும்பில் நடத்தவுள்ளதாகவும் அதன் பேச்சாளர்களில் ஒருவரான ஈ. ஸி. நாணயக்கார தெரிவித்துள்ளார்.

புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்க அல்லது அழுத்தம்தெரிவிக்க பௌத்த சிங்களவர்களுக்கு அதிகாரமோஉரிமையோஇல்லை. அந்த அதிகாரம் தமிழ் மக்களுக்கே உண்டு என்று ''எமது குரல்'' அமைப்பின் பிரதான உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். இவர் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராவார். சட்டத்தரணியான இவர் இப்போது இனவிவகார நல்லிணக்கப் பிரதி அமைச்சராகவும் உள்ளார்.

தெற்கின் இரு பிரதான கட்சிகளை ஒரே சந்திக்கு அழைத்து அதனூடாக புலிகளையும் பேச வைக்கலாம். இவ்வாறு செய்வதற்கு முன்னதாக புலிகளுக்கு சிங்கள அரசுமீது நம்பிக்கை ஏற்படும் வகையில் அரசு நடந்து கொள்ளவேண்டும் என்பதே ''எமது குரல்'' அமைப்பு முன்னணிப் பிரமுகர்கள் அநேகரின் ஒருமித்த கருத்துமாகும்.

இதற்கிடையில் புலிகள் விரும்பாத பொதிக்கு ஆதரவு தரமுடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார். இதுவொன்றும் புதினமான கருத்தாகக் கொள்ள முடியாது. கடந்த 16 வருடங்களாக ஒவ்வொரு எதிர்க்கட்சியும் தேர்தல் [illegible] தமிழர்களுக்குச் சார்பான

(8 ஆம் பக்கம் பார்க்க)

- சண்டையை நிறுத்திச் சமாதானத்தைக் கொண்டு வரப்போவதாக உறுதியளித்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றார் சந்திரிகா ஐந்து ஆண்டுகள் முடிவுற்ற நிலையிலும் சண்டை தொடர்கின்றது; சமாதானத்துக்கான அறிகுறியே இல்லை.

★ ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அவர் சமாதான தேவதை; இப்போது ''சமர்'' தான தேவதை!

- அர்த்தமற்ற போரை நிறுத்துமாறு கோரிக் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

★ அர்த்தம் என்பதற்கு—பணம், பொருள்—என்ற கருத்தும் உண்டு; அந்த வகையில், உயர் மட்டத்திலுள்ள சிலருக்கு இது அர்த்தம் 'நிறைந்த' போராக இருப்பதால், இது நிறுத்தப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவு!

- மட்டக்களப்பில், இராணுவத்தினர் செல்லும் வீதிகளிலுள்ள வேலிகளை அகற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

★ வேலியே 'படை'யை மேய்ந்துவிடும் என்றபயமோ?

- எவ்வித நிபந்தனையுமின்றி. அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் அடுத்த ஆண்டில் இந்தியாவுக்கு வருவாராம்!

★ முன்னர் இந்தியாவை 'நிந்தனை' செய்தவர், இப்போது எவ்வித 'நிபந்தனை' யுமின்றி இந்தியாவுக்கு வருகின்றாரென்றால்......? சோழியன் குடுமி சும்மா ஆடாது!

### எதிரொலி...
- இடியன் -

- கொங்கோ குடியரசிலுள்ள கோபல்லா என்ற கிராமத்தில், பதினேழு மாதப் பாலகன் ஒருவனை ஒரு சேவல் கொத்திக் குதறிக் கொன்றுவிட்டது!

★ அமெரிக்கா தயாரிக்கும் சர்வதேசப் பயங்கரவாதிகளின் பட்டியலில் இந்தச் 'சா'வலும் இடம் பெறுமோ?

- உள்துறை அமைச்சர் அத்வானியை எதிர்த்து, முன்னாள் தேர்தல்ஆணையாளர் சேஷன் போட்டியிடுகிறார்!

★ மதச்சார்பின்மை, அடிப்படை உரிமை போன்றவற்றுக்கு ஆபத்து ஏற்படும்போது அவர் 'அல்சேஷனா'க நின்று காப்பார் என அவருடைய ஆதரவாளர்கள் பிரசாரம் செய்யக் கூடும்!

- அரசில் அங்கம் வகிப்பவர்களே. அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களிலும் சில சமயம் கலந்து கொள்கின்றார்கள்.

★ ''அரை''சியல்வாதிகளின் போக்கே அதுதானே!

- கடப்பாவிலா அல்லது பெல்லாரியிலா போட்டியிடுவதென இறுதி நேரம் வரை சோனியா தடுமாறினாராம்!

★ காரணம், அதீத நம்பிக்கையா அல்லது நியாயமான அவநம்பிக்கையா என்பதைத் தேர்தல் முடிவு தான் சொல்லும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு சுவைகள் விரவி நிற்கும் 'யாழ்ப்பாணம்' சிறுகதைத் தொகுப்பு

**தம்பிஐயா தேவதாஸ்**

நூல் வரிசை

**நூல்: யாழ்ப்பாணம்**
**ஆசிரியர்: அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை**

நாடகங்களாகவே எழுதி, நாடக நூல்களையே அதிகமாக வெளியிட்டுள்ள அராலியூர் ந. சுந்தரம்பிள்ளைதமது முதலாவது சிறுகதைத் தொகுப்பாக 'யாழ்ப்பாணம் நூலை வெளியிட்டுள்ளார். பத்துச் சிறுகதைகளையும் ஒரு கட்டுரையையும் ஆசிரியர் இதில் சேர்த்துள்ளார். எல்லாமே பத்திரிகைகளில் பிரசுரமான ஆக்கங்கள்.

அக்கட்டுரையில் சிறுகதை ஆசிரியர்கள் கையாளுகின்ற உத்திகள், அழகுகள் பற்றிச் சுருக்கமாகக் கூறும் சுந்தரம் பிள்ளை அவற்றில்பலவற்றை இக் கதைகளில் அமைத்து எழுதியிருப்பதையும் வாசகர்கள் காண்பார்கள்.

நாம் இளமையில் தீட்டுகின்ற திட்டங்களுக்கு எதிர் மாறாகவும் எமது பிற்கால வாழ்க்கை அமையக்கூடும் என்று கூறுகிறது 'நிஜங்கள்' சிறுகதை 'காடு சிரித்தது' வன்னியில் நடந்த ஒருதலைக் காதல் கதை.

விஸ்வமடுவுக்குக் கமம் செய்யப்போன ஒரு யாழ்ப்பாணத்து இளைஞனது கதை சங்கமம்! அவன் முதலில் போன பொழுது அங்கிருந்த பயங்கரக்காடு அதை வெட்டி அழித்து அவன் அமைத்த தோட்டம் பிறகு இலங்கை இராணுவம் வந்தபொழுது அவன் யாழ் ப்பாணம் ஓடிவர மீண்டும் காடு வளர்ந்து எல்லாவற்றையும் மூடியமை அவன் திரும்பவும் போய் காட்டைவெட்டித் தோட்டம் அமைத்தது எல்லாமே தத்ரூபமாக சித்திரிக் கப்பட்டுள்ளன.

'அதிபர், திருவிழா' என்பன ஆயுதப்போராட்டம் துவங்கிய காலத்துக் கதைகள் இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தில் சுதந்திரமாகத் திரிந்த அந்தக் காலம் எவ்வளவு பயங்கரமானது. அந்தப் பயங்கரத்தையும் அவலத்தையும் ஆசிரியர் நகைச்சுவையுடன் சொல்கிறார் 'அதிபரில்ஆடம்பரமாகச் செய்யப்படும் கோவில் திருவிழாக்கள் போர்க் காலத்தில் அடக்கமாகச் செய்யப்பட்டதை சொல்வது 'திருவிழா'.

''மொட்டுக்கள் மலர்கின்றன'', மலை நாட்டில் நடந்த கதை, யாழ்ப்பாணத்து ஆசிரியரும் மலைநாட்டு ஆசிரியையும் அதில் திருமணம் செய்து கொள்கின்றனர்.

ஏனைய நான்கு கதைகளும் 1995 ஆம் ஆண்டு இடம் பெயர்வுக்குப் பிந்திய காலத்தவை. இன்று இந்த நாட்டில் தமிழ் மக்கள் நிரந்தரமற்ற நிம்மதியற்ற வாழ்வு வாழ்ந்து கொண்டிருப்பதை விளக்குகின்றது. ''தமிழ்த் தினப் போட்டி, சிறுகதை, 'வீடு' சிறுகதை, யாழ்ப்பாணத்தில் வீடு வாசல்களை இழந்து நிற்பவர்களது பரிதாபத்தை குறியீடாகக் காட்டி நிற்பது.

'யாழ்ப்பாணம்' ஒரு வித்தியாசமான கதை; யாழ்ப்பாணம் வழமைக்குத் திரும்பி விட்டது. அங்கே பாலும் தேனும் பாய்ந்து ஓடுகின்றன. என்று உலகம் முழுவதிலும் பிரசாரம் செய்கிறது அரசாங்கம். சிங்கள அதிகாரியான சிறிசேனா இங்கு வந்து பார்த்ததோ, உடைந்த கட்டடங்கள், அவற்றில் குடியிருக்கும் நிரந்தர அகதிகள், அழிந்து போய் விட்ட கட்டடங்களின் அடித்தளங்கள், காடுகள், செங்கற்கள், கண்ணீர் சிந்தி எழுதவேண்டிய கதையை நகைச்சுவை ததும்ப எழுதியமை ஆசிரியரது திறமைக்கு ஒரு சான்று.

''ஒரு பென்ஷனைத் தேடி'' என்ற சிறுகதையில் நேரத்துக்குப் பென்ஷன் கிடைக்காததால் அல்லலுறும் ஆசிரியரின் துன்பத்தைச் சொல்லும் அதே நேரத்தில், இன்று இலங்கையில் தமிழர் அனுபவிக்கின்ற துன்பங்கள் பலவற்றையும் சொல்கிறார் சுந்தரம் பிள்ளை.

சுருக்கமாகக் கூறினால் பல்வேறுபட்ட களங்களில் வைத்து, வெவ்வேறு சுவைகளும் விரவி நிற்க எழுதப்பட்ட காலத்தை நன்கு பிரதிபலிக்கும் சிறுகதைகள் என்றே குறிப்பிட முடிகிறது. ★

# மக்கள் முகம்



நெல்லியடி, ஒக .22

இமையாணன் உடுப்பிட்டியைச் சேர்ந்த கோபாலசுந்தரம் பரஞ்சோதி கொழும்பு மாவட்ட மேலதிக நீதிமன்ற நீதிபதிகள் எம். எம். மக்கி முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் பழைய மாணவரான இவர் தொழிற் திணைக்களத்தில் பிரதம எழுதுநராக நீண்டகாலம் சேவையாற்றியுள்ளார்.

இவர் —

அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்பு விவேகானந்த சபை, கொழும்பு. கதிர்காமம் தொண்டர்சபை, திருக்கேதீஸ்வரசபை பண்டார நாயக்கா மாவத்தை சண்முகானந்த கானசபா, உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகசபை உறுப்பினருமாவார். அத்துடன் உடுப்பிட்டிச் சந்தி வல்லை வாளி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான தர்மகர்த்தாவான இவர் ஒரு தொழிற்சங்கவாதியுமாவார். (ஐ–109)

★ ★ ★ ★ ★

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் முதலாந்தர அதிபராகக் கடமையாற்றிவந்த க. தனபாலசிங்கம் சண்டிலிப்பாய் கல்விக்கோட்டத்தின் உதவிக்கல்விப்பணிப்பாளராக அண்மையில் நியமனம் பெற்றுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறைச் சிறப்புப்பட்டதாரியான இவர் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை, கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். (ஐ–152)

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக. 22

ஆவரங்கால் கிராமத்தைச் சேர்ந்த சமய — சமூக சேவையாளர் சி.கிருஷ்ணபிள்ளை யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக அண்மையில் நீதி அரசமைப்பு விவகார அமைச்சரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் சுமார் நாற்பது வருடகாலமாக அரச எழுதுநர் சேவையில் கடமையாற்றி. இறுதியாக யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் பணிபுரிந்து சமீபத்தில் ஓய்வு பெற்றுள்ளார். (ஐ-30)

# ஆர்ப்பாட்டங்களும்...

(7 ஆம் பக்கத் தொடர்)

கருத்துகளை முன்வைப்பார்கள். சிங்கள — தமிழ் மக்கள் ஆதரவு தரக் கூடிய தீர்வு என்ற தொனிப்பொருளுடனேயே அவர்கள் தேர்தல் அரங்கை அலங்கரிப்பார்கள். எதிர்க்கட்சித் தலைவர் சிங்கள வாக்காளர்களின் பலவீனத்தை அறிந்து சந்தர்ப்பம் பார்த்துக் காயை நகர்த்துகிறார். அதவாது தான் ஆட்சிக்கு வந்தால் புலிகளுடன் பேசுவதாக முழக்கமிட ஆரம்பித்துவிட்டார். அதனை பறைசாற்றுவதைப் போல், கடந்த புதனன்று தமது இளைஞர் பிரிவை வைத்து கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினார். கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை; இளைஞர்கள் ஏமாற்றப்பட்டுவிட்டார்கள்; என்றெல்லாம் கோஷமெழுப்பி அரசைக் கண்டித்து அலரிமாளிகை வரை ஆர்ப்பாட்டமொன்றை நடத்த முற்பட அது ஜனநாயகத்துக்கு விரோதமெனக் கருதியோ என்னவோ ஆர்ப்பாட்டக்காரர்களைத் தடிகளால் தாக்கித் துரத்திவிட்டனர்.

கொம்பனித்தெருச் சந்தியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட பொலீஸ் தாக்குதல் காரணமாக 31 பேர் காயமடைந்தனர். இதிலொரு நாடாளுமன்ற உறுப்பினரும் அடங்குவார். அதனுடன் அந்த முன்னணியின் செயலாளர் வரராஜ் காரியவஸம் நேற்று நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிய கண்டிப் பெரஹராவைக் காரணங்காட்டி அப்பாவித் தமிழ் இளைஞர், யுவதிகள் தொடர்ந்தும்கைது செய்யப்படுவது தொடர்கிறது. யுத்தத்தைக் கண்ணால் காணாத அதன் சத்தத்தைக் காதால் கேட்காத ஒன்றும் அறியாத மலையக மக்கள் தமிழர்கள் என்ற காரணங் கருதி விளக்கமறியல் என்னும் விலங்குக்குள் அடைக்கப்படுகின்றார்கள். கடந்த ஐந்து தினங்களாக மலையகத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பலர் கைதும் செய்யப்பட்டனர்.

கடந்த ஞாயிறன்று தலைநகரில் தமிழர்கள் பெருமிதம் கொள்ளும் வகையில் ஆடிவேல் விழாவின் தேர் உற்சவம் பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்களிப்புடன் பக்தி மணங்கமழும் விதத்தில் சிறப்பாக நடந்தேறியது. பல மைல் தூரம் பாற்குடம் சுமந்த பெண்கள் கொழும்பு வீதிகளில் ''ஊர்வலம்'' போனார்கள்.

இவற்றுக்கிடையில் அரசின் ஐந்தாண்டுப் பூர்த்தி நிகழ்ச்சிகள் மூன்றரைக் கோடி ரூபா செலவில் தலைநகரில் நேற்று நடைபெற ஏற்பாடாகி இருந்தது. பல வீதிகள் மூடப்பட்டு பல்வேறுபட்ட கெடுபிடிகளுடன் நகரின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. தமிழர்கள் துருவித் துருவி விசாரிக்கப்பட்டார்கள். விழாக்கள் என்றால் ஆனந்தம். ஆனால் தெற்கு மற்றும் மலையகம் வாழ் தமிழர்களோ விழாக்களை அச்சத்துடனும் பதற்றமான நிலையுடனுமே எதிர்நோக்குகின்றனர். இத்தனை ரூபா செலவு செய்து அரசு நடத்தும் இந்த விழாவில் மேலும் 21 கொள்கைத் தொடாகள் வாக்குறுதிகளாக வழங்கப்படுகின்றன. வாக்குறுதிகள் காதுக்கு இதமாக இருந்தாலும் அவை கரைசேராத ஓடங்களாக நடுக்கடலில் சிதறும்போது எப்போதுமே ஏமாற்றப்படுபவர்கள் அப்பாவிப் பொதுமக்களே! ★

# 4 ஆயிரத்து 500-க்கு மேற்பட்ட...

(7 ஆம் பக்கத்தொடர்)

உள்ளன. இதனால் இந்தக் கிராமங்கள் இருளில் மூழ்க வேண்டிய நிலை ஏற்படப் போகின்றது.

இந்த மின்மாற்றித் தகர்ப்புக்களால் பாதிக்கப்படப் போவது முற்றுமுழுதாக அப்பாவித் தமிழ் மக்களே. ஏனென்றால் படையினரதும் தமிழ் கட்சிகளினதும் முகாம்களுக்கு அருகேயுள்ள மின்மாற்றிகள் அவர்களது பாதுகாப்புக்குள் கொண்டுவரப்பட்ட நிலையில் படையினருக்கும் தமிழ் கட்சிகளுக்கும் தேவையான மின்சாரம் சுமுகமாக வழங்கப்பட இருக்கிறது. படைமுகாம்களும் தமிழ் கட்சி முகாம்களும் இல்லாத பகுதிகளிலே உள்ளவர்கள் தான் பாதிக்கப்படப் போகிறார்கள்.

வவுனியாப் பகுதியில், கிராமப்புறங்களில் வாழ்பவர்கள் என்றாலும் அவர்களின் அன்றாட வாழ்க்கையில் மின்சாரம் அத்தியாவசியமானதாகவே இருக்கிறது.

பெரும்பாலான வீடுகளில் குழாய்க்கிணறுகள் தோண்டப்பட்டு மோட்டார் பூட்டப்பட்டுத்தான் அன்றாடம் குடிப்பதற்கும், குளிப்பதற்கும் தண்ணீர் எடுக்கப்படுகிறது. இவர்கள் இந்த மின்சாரத் துண்டிப்பால் பாதிக்கப்படப்போகிறார்கள். ஒன்றில் புதிதாக கிணறு வெட்ட வேண்டிய நிலை; அல்லது ஜெனறேற்றர் வாங்க வேண்டிய நிலையை இவர்கள் எதிர்பார்த்துள்ளனர். பயிர்ச் செய்கையில் ஈடுபடும் பலரும் இதே சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர்.

இது தவிர படிப்பதற்கும் பாட்டுக்கேட்டுப் பொழுதைப் போக்குவதற்கும் இருக்கும் சிக்கல்களைவிட மின்சாரத்தை நம்பி பாரிய அரிசி ஆலைகளையும் தொழில் முயற்சிகளையும் தொடக்கியவர்கள் எல்லாம் தலையிலே துண்டைப்போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பிலேயும் எத்தனையோ மின்மாற்றிகளைத் தகர்த்து விட்டனர். ஆனால் அங்கேயெல்லாம் உடனேயே வேறு புதிய மின்மாற்றிகளைப் போடுகிறார்கள். இங்கே தமிழ் மக்கள்தானே என்ற எண்ணத்தில் போலும் இவ்வாறு செய்கிறார்கள் என்று பலரும் புலம்பித்திரிகிறார்கள்.

இலட்சக்கணக்கான ரூபா பணத்தைச் செலவழித்து இலத்திரனியல் சாதனங்களை வாங்கிக் குவித்து வைத்திருக்கும் அவர்களுக்கு இனிமேல் அவைகளைப் பரணில் போட வேண்டுமே என்ற ஆதங்கம். இவ்வாறு ஆதங்கத்தில் மூழ்கி இருப்போர் ஒன்றிரண்டு பேர் அல்ல 4 ஆயிரத்து 500 குடும்பத்தினர்.

அதிலும் மின்சார சபையின் பட்டியல்படிதான் இந்தளவு குடும்பங்கள் பாதிக்கப்படப் போகின்றன என்ற கணிப்பீடு. ஆனால் வவுனியாவின் கிராமப்புறங்களின் மின்விநியோகநிலை இந்தப் பட்டியல் நிலைக்கு நேர்மாறானது. ஒரு மின்மாற்றியால் நூறுகுடும்பங்களுக்குமின்சாரசபைமின்சார சப்ளை செய்கிறதென்றால் உறுதியாகநூற்றைம்பதுகுடும்பங்கள் கள்ளக்கரன்ட் எனப்படும் சட்டவிரோதமான மின் பாவனையைப் பெறுகின்றன. இந்தக் கணக்கில் பார்த்தால் சுமார் 10 ஆயிரம் குடும்பங்களுக்குமேல் பாதிக்கப்படக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றது.

இந்த நிலையில் மின்விநியோகத்துண்டிப்பிற்கு எதிர்ப்புகள் ஏகப்பட்ட விதத்தில் எழுந்துள்ளன. ஆயினும் மின்மாற்றிகளைக் கழற்றும் விடயத்தில் படைத்தரப்பு உறுதியாக இருக்கிறது. ஏனென்றால் ஒவ்வொரு மின்மாற்றியும் வெடிக்கும் போது ஏற்படும் நஷ்டம் ஐந்து பத்தோ அல்ல 5 லட்சத்திற்கும் மேல். அதிலும் பூந்தோட்டம், வவுனியா நகர்ப் பகுதி, குருமண்காடு, சூசைப் பிள்ளையார்குளம் ஆகிய பகுதிகளில் வெடித்தவையெல்லாம் சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியானவை. எனவே தொடர்ந்து இந்த நஷ்டங்களைத் தாங்கத் தயாராக இல்லாத நிலையில் மின்மாற்றிகளைக் கழற்றும் பணி இப்போது ஆரம்பமாகி விட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை பூவரசங்குளம் பகுதியில் இருந்த 2 மின்மாற்றிகள் கழற்றப்பட்டுவிட்டன. அதனால் அந்தப் பகுதி இருளாகி விட்டது. ஆயினும் கடைசி நேர முயற்சியாக மின்சார சபை அதிகாரிகளும், அரசாங்க அதிபரும் வவுனியா பகுதிக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிகளைச் சந்தித்து இது பற்றிப் பேச இருக்கிறார்கள்.

இந்த மடலை எழுதும் போது மின்மாற்றிகளைக் கழற்றுவதா விடுவதா என்பது பற்றிமுடிவெடுக்க கூட்டமொன்று வவுனியாப் படைத் தலைமையகத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இதன் முடிவிலேதான் வவுனியாப் பகுதியில் உள்ள கிராமப்புற மக்களின் ஒளிமயமான எதிர்காலம் ஒளிந்து கொண்டிருக்கிறது. ★

# விளையாட்டு நிகழ்வு

குருநகர், ஒக. 22

குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் 'தூயஒளி' வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆட்டத்தில் சென் அன்ரனிஸ் (ஏ) அணியை எதிர்த்து சென் மேரிஸ் அணி மோதவுள்ளது.

(க–51)

# கோரிக்கை

காரைநகர், ஒக. 22

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் விவசாய சம்மேளனக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் அறிவித்துள்ளார்.

(ஐ–73)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

சங்கானை

எஸ். சரசானந்தராஜா (104424 ஏ), ரீ. கந்தையா (094757ஏ), கே.ஞானகுமார் (099187 ஏ), எஸ். அருளானந்ததேவி (101398 ஏ), கே. கனகதரன் (101398 பீ), எஸ். செல்வசந்திரன் (102028 ஏ), கே. ராஜேந்திரம் (105092 ஏ), ஆர்.பிறேமந்தி (105092 பீ), ஆர்.நிலக்சன் (105092 சீ),.

எஸ். செல்வநாயகம் (105807 ஏ), கே.மகேந்திரன் (105825ஏ), எஸ்.நாகலிங்கம் (105888 ஏ), என். மகேஸ்வரி (105888 பீ), பீ. நேசலிங்கம் (106177 ஏ), என்.ராவணன் (106177 பீ). எஸ். சோதிநாதன் (108705 ஏ), ஆர். குணதீஸ்வரன் (108706 ஏ), எம். லீலாவதி (108706 பீ), ஏ.பீ. ராசையா (108713 ஏ), எஸ். சிவனிகதாரன்(108732 ஏ), எம். சிற்சபேசா (108735 ஏ),.

ஐ. இந்திராணி(108758ஏ), வி. மீரா (108781 ஏ), வி. மீரா [108781 பீ], ஜி. சிதம்பரநாதன் [108793 ஏ], எஸ். கருணைராசா [108815 ஏ], பீ. செல்வன் [108834 ஏ], எஸ். சுதர்சன் [108834 பீ]. எஸ். சுதர்சன் [108834 சீ], எஸ். சுகிர்தா [108834 டீ], எஸ். ரம்சாவணி [108869ஏ], எஸ். ஜெயக்குமார் [108870 ஏ], எஸ். நடராசா [108874 ஏ], என்.சிவக்குமார்[108874 பீ],.

ஆர்.நடராஜன்[108900ஏ], கே. ஸ்ரீகௌரி [108900 பீ], கே. ஜி. சங்கர் [108900 சீ], கே. ஏ. சங்கர் [108900 டீ], என். தயாளன் [108943 ஏ], எம். சிவஞானம் [109039ஏ], பீ. சிவக்குமரன்[111751 ஏ], எஸ். சந்திரகலா[111751பீ], எஸ்.உதயகுமார்[111794ஏ], எஸ். திருச்சிற்றம்பலம் [111834 ஏ], எம். இரத்தினபூபதி [111865ஏ], எம் ஜெயராஜன் [111865 பீ], எஸ். வளர்மதி [11789 ஏ), எஸ். கிருபாகரன் [11824 ஏ],-

கே. தங்கமணி(812202ஏ], எஸ். சிவனேசராணி [105831 ஏ], ஏ. பொன்னம்மா [105832ஏ], ஆர்.செல்லம்மா [106070 ஏ], ஆர். பேரின்பராணி [106070 பீ], ரீ. பவளராஜி [109002 ஏ], எஸ். முரளீதரன் (111855 ஏ), ஆர். சுதாசினி (111855 பீ): பீ. விசரர் (111881 ஏ), வி. சாந்தி (111881பீ), வி.டிலிக்தன் (111831 சீ). எஸ்.சந்திரகுமார் (111980 ஏ), என். ஆரியவதி (112084 ஏ). எஸ். அழனி (113241 ஏ),.

யாழ்ப்பாணம்

கே. தங்கவேலு (109110 ஏ), சி. கந்தையா (109129 ஏ). கே. கந்தையா (109129 பி), எஸ். மகேஸ்வரம்மா (109129 சி). பி. ஜெகதீஸ்வரி (109172 ஏ). என். சுப்பிரமணியம் (109198 ஏ), என். தனலக்சுமி (109198 பி), ரி. திருக்குமரன் (109199ஏ), ரி. றாகினி (109199 பி), ஆர். பி. மனுவேல் (10920g ஏ), பி. ராஜசுந்தரம் (109203 பி).

பீ. பிறேமகுமார் (109209 ஏ), பி. கிருபானா (109209 பி), பி. புர்ஷிகா (109209 சீ), பீ.கிரிஷான் (109209 டீ), பீ. நிதர்ஷன் (109209 ஈ), எம். ஏ.ரீ. சந்தியோகு (109245 ஏ), என். சத்தியரூபன் (109250 ஏ), எம். பிறேமராணி (109298 ஏ). எம். ஜெயஹர்ஷனி (109298 பீ).

எம். ரசிகாசன் 109298சீ), எம், உமேஷ் (109298டீ), எஸ். மார்க்கண்டன் (109323 ஈ,) எம். பாலதேவி (109323 எவ்), எம். மயூரன் (109323 ஜீ), வீ. சிவமலர் (109324 ஏ), வீ. சதீஸ்குமார் (109324பீ), எஸ். மெடோனா (109376ஏ), பீ. சிவபதாம் (109377ஏ).

எஸ். விநாகயமூர்த்தி (109379ஏ), ஜே. மரிசலின் (109393ஏ), ஜே. சுதாவதினி (109393பீ), வை. என். ராஜன் (109393சீ), ஜே. அருள்ராஜன் (109393டீ), ஜே. ஜே. ஜெயந்தி (109393 ஈ), எஸ். சிவராஜசிங்கம் (109409ஏ), எஸ். சுகந்தவாணி (109409பீ), எஸ். டிஜென்சா (109409சீ), ஆர். டீ. பாலகாந்தன் (109450ஏ).

கே. பிரியசூடி (109454சீ), எஸ். ஜெயரஜா (109484ஏ), ஜே. அருள்நேசன் (109464 பீ),எஸ்.நடேஷ்(109493ஏ), எஸ். ஜெயபாலன் (109494 ஏ), எஸ். வரதராஜா (109504ஏ), வீ. ரமியா (109504பீ), வீ. லாவணியா (109504சீ), வீ. ஜெயராணி (109504டீ).

வீ. பாலசுப்பிரமணியம் (109508ஏ), எம். பாலசுப்ரமணியம் (109508பீ), வீ. பாலசுப்ரமணியம் 109508 சீ), பீ. பாலசுப்ரமணியம் (109508டீ), ஆர். சரஸ்வதி (109518ஏ), ஆர். கணப்பிரியன் (109518பீ),ஆர். கௌசிலியா (109518சீ), ஆர. நிருஜன் (109518டீ), எஸ். நாகம்மா (109520ஏ). ஏ. விஜயலக்சுமி (109522ஏ)

ஏ. லயன் (109522பீ), ஏ. டனிஷ் (109522சீ), ஏ. ககுஜிதன் (109522டீ), ஏ. தனுராஜா (109522ஈ), கே. ஜே. வெரோணிகா (109523ஏ), ஜே.ஜே. றுக்மன் (109525ஏ), ரீ. யேசுதாசன் (109525பீ), ரீ. முத்துக்குமார் (109527 ஏ), எம். நேசமலர் (109527 பீ),

பீ. நாகேஸ்வரி (109527 சீ), எஸ். கந்தசாமி (109528 ஏ), பீ. சரோஜினிதேவி (109533ஏ), ஆர். நிர்மலன் (109542ஏ), என். பிரகாஷ் (109542பீ), என். பிரஷாந்தன் (109542சீ), எஸ் தில்லையம்பலம் (109546ஏ). எஸ். மங்கையர்க்கரசி (109546பீ), எஸ். விதுஷராணி (109546சீ), எஸ் கிருஷாலனி (109546டீ),

ரீ. பீ. தாசிசன் (109550 ஏ), ரீ. அமிர்தநாதன் (109560ஏ), ஏ. மேரிராணி (109560பீ), ஏ. அமலராணி (109560சீ), ஏ. ராயப்பா (109568ஏ), ஏ. எம். யோசப்பின் (109568பீ). எஸ். சந்திராதேவி (109571ஏ), ரீ. தியாகராஜ் (109573ஏ), எஸ். பிரஷாந்தி (109577ஏ),

கே. பேருபாலன் (109580 ஏ), ரீ. லோறன்ஸ் (109593 ஏ), ஜே. எம். ஜோசபின் (109593ஏ), எஸ். சந்தாம்பிள்ளை (109601ஏ), எஸ். ராஜினி (109601பீ), எஸ். சிறூபி (109601சீ), எஸ். சிறீனா (109601டீ), எஸ். சிறீவினா (109601ஏ). ரீ. கோபாலசிங்கம் (109605ஏ). கே. போகம்மா(110405ஏ), எல்.சத்திபசீலன்(112265ஏ), எஸ்.சிறிபவானந்தராஜா (112268ஏ), எஸ். சிவரஞ்சினி (112268 பீ), கே. ராகி (112270ஏ). ஆர். கதிரவேலு (112272ஏ), ஆர் அஞ்சனேஸ்வரி (112272பீ), ஆர். பிரஷாந்தா(112272சீ), ஆர். நகிலன் (112272டீ)

கே. சபாரத்னம் (112274 ஏ), என் பாலசுப்பிரமணியம் (112276ஏ), எஸ். பாலசுப்பிரமணியம் (112276பீ), எஸ்.தனபாலசிங்கம் (112288 ஏ), கே.தயாளினி (112283 பீ), பீ.சுந்தரலிங்கம்(112289 ஏ), சீ. சுந்தரலிங்கம்(112289 பீ), பீ. தம்பிப்பிள்ளை (112295ஏ), கே. பகிரதி (112306ஏ), கே. அருந்தயாகியா (112306பீ), ரீ. அருணோதயன் (112307ஏ),எவ். எம்.கே. சவரிராஜா(112309 ஏ)

எஸ். ஞானந்தி (112312 ஏ),எஸ் சிவசுகல்யா(112312 பீ), எம். கே. தங்கநாயகம் (112314ஏ), சீ பீ. தங்கநாயகம் (112314பீ), ஏ ஷகிலா (112327ஏ), ஆர். ரீ. இக்னீசியஸ் (112332ஏ), ஆர். தம்பிநாயகம் (112332பீ), என். பீ. அனோமா (112333ஏ), பீ.விமலா (112333பீ), கே. நவாதினம் (112339ஏ)

கே. புஷ்பராணி (112339 பீ), கே.சிறிதரன் (112344 ஏ),எஸ் கஜேந்திரன்(112346 ஏ), கே. பஸ்தியாம்பிள்ளை (112350ஏ), ஆர். புரசந்திரன் [112354ஏ], எஸ். சுந்தரலிங்கம் [112361ஏ], கே. சுந்தரலிங்கம் [112361பீ], எஸ். திருநாகுகரசு [112365ஏ], எஸ். உமா [112365பீ], ரீ. தவராணி [112365சீ]

ரீ. ஜெபராஜா [112365 ஈ], என்.தங்கணேஷ்[112375 ஏ], எஸ். சோதிநாதன் [112378ஏ], எஸ். தங்கலிங்கம் [112379ஏ], ஏ. யோசப் [112380ஏ], எல். சந்திஜி [112385ஏ], பீ மகாதேவன் [112386ஏ], பீ மகாதேவன் [112386பீ], எம். ஜே அன்ரனி [112387ஏ], ரீ.அன்ரனி [112387பீ]

எம் றெஜினா [112388 ஏ], ஏ நிஷாந்தன் [112388 பீ], கே மேகனசுந்தரம் [112391ஏ], கே. ஷாமினி [112391பீ], கே. தக்ஷன் [112391சீ], எஸ்.ரத்தினசிங்கம் [112398ஏ], வை. பத்மாவதி [112398பீ], எஸ்.கங்காசன் [112418ஏ],

(தொடரும்)


யாழ்ப்பாணம் வந்துவிட்டது!

BEN CAFE
INSTANT COFFE MIX

திடீர் கோப்பி

பால், சீனி உள்ளடக்கியது.

யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் இடம்

ARUNS SPORTS SPOT

347, Kasthuriyar Road, Jaffna.

(சி/8587)


## கைதானவர் காங்கேசனில்

யாழ்ப்பாணம், ஓக 21

சாவகச்சேரியில் கடந்த 18 ஆம்திகதி கைதுசெய்யப்பட்ட பாலசுப்பிரமணியம் சந்திரகுமார் (வயது 31) என்பவர் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

[இ-3]


## எமது திருமண வாழ்த்துக்கள்

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவரும்
இலங்கை செஞ்சிலுவைச்சங்க வலி. கிழக்குப் பிரிவு உப தலைவரும்
சமாதான நீதிவானுமாகிய ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலியைச் சேர்ந்த

திரு. செல்வரட்ணம் அவர்களின் புதல்வன்

திருநிறை செல்வன்
**பகீரதன்**
அவர்களுக்கும்

திருநிறை செல்வி
**ஷோபனா**
அவர்களுக்கும்

இன்று இந்தியாவில் நடைபெறும் திருமண விழா நன்நாளில்!
திருமண வாழ்வில் புதிதாகப் புகும் இவ்விரு உள்ளங்களையும் இனிய வாழ்வில் சகல செல்வங்களையும் பெற்றுப் பெருவாழ்வு வாழவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

இலங்கை செஞ்சிலுவைச் சங்க
வலி. கிழக்குப் பிரிவு
நிர்வாகசபை உறுப்பினர்கள்.

கோப்பாய்
லயன்ஸ் கழக
அங்கத்தவர்கள்.

வலயத் தலைவர் Dr. வை. தியாகராஜா
மாவட்டத் தலைவர்: Dr. எஸ்.எஸ். அருளானந்தம்

(சி/8586)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 21 — 06 — 1934

மறைவு 23 — 07 — 1999

திருமதி

## தங்கம்மா மாணிக்கம்

எங்கள் குடும்பத் தலைவி திருமதி தங்கம்மா மாணிக்கம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பி ஏனைய வழிகளில் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகள்.

22-08-1999 அன்று நிகழும் வீட்டுக் கிரியைகளிலும் அதைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

கணவர் — மாணிக்கம்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

புதிய செம்மணி வீதி,
ஞானவைரவர் கோயிலடி,
இருபாலை தெற்கு,
கல்வியங்காடு.

(68365)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

கந்தசாமி கிருஷ்ண லதா என்பவருடைய தேசிய அடையாளஅட்டை[818600119V], விசேட அடையாள அட்டை (091004740) என்பன இணுவிலுக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கவி ஸ்ரூடியோ, இணுவில் அல்லது சி. செல்வரட்ணம், நாச்சிமார் கோவிலடி, [சைக்கிள் கடை], யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். [68358]

அளவெட்டி தெற்கு, அளவெட்டியைச் சேர்ந்த குமாரசாமி ஜெயானந்தன் என்பவரது தேசிய அ. அட்டை (இல. 780450843V) யும், விசேட அ. அட்டை (இல. 0907002765) யும் மற்றும் குமாரசாமி சிவன்செயல் என்பவரது தேசிய அ. அட்டை (இல. 476352215V) யும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஜெயமங்களாஸ் அழகுமாடம், சுன்னாகம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (சி/8597)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

### புறநிலைப் படிப்புக்கள் அலகு
தென்மராட்சிப் பிராந்தியம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் தென்மராட்சி பிராந்திய நிலையத்தில் பின்வரும் கற்கை நெறிகளுக்கான புதிய வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

1. தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (English for Communica--tion)
2. உயர்தர ஆங்கிலக் கற்கைநெறி
3. நிர்வாக முகாமைத்துவம்
4. கல்விமேம்பாட்டுப் பயிற்சிநெறி (நுண்ணறிவு, பொது அறிவு உள்ளடங்கியது)
5. நில அளவையும் படவரைக்கலையும்
6. முற்பள்ளி ஆசிரியர்களுக்கான கற்கை நெறி
7. சூழல் முகாமைத்துவம் (Environmental Manage--ment)

மேற்படி கற்கை நெறிகளில் பயில விரும்புபவர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் எமது பிராந்திய நிலைய அலுவலகத்தில் நேரடியாகவோ சுயவிலாசமிட்டு 3.50/- பெறுமதியான முத்திரை ஒட்டிய தபாலுறையை ''தொடர்பாளர் தென்மராட்சி புறநிலைப் படிப்புக்கள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், சாவகச்சேரி'' என்ற முகவரிக்கு அனுப்பியோ விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

– பதிவாளர்

(சி/8574)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர், கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (68350)

Broiler இறைச்சிக் கோழிகள் தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். [பாதிக் கோழி உட்பட] குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அடைமுட்டையும் வாழைக்குட்டிகளும் உண்டு. தொடர்புகளுக்கு இல.19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (68372)

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- இல.15, 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்) (68274)

இறைச்சிக்கோழி (புறோயிலர்) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: கண்ணா வீடியோ சென்ரர் வளவு, மான் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (68155)

நியாய விலையில் இறைச்சிக்கோழி (புறோயிலர்) சகல நிறைகளிலும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். இல. 217/A, ஆஸ்பத்திரி வீதி, (முல்வைச்சந்தி அருகில்), யாழ்ப்பாணம். (68312)

## வீடு விற்பனைக்கு

பிறவுண் வீதி, இல-134 இல் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் — 077314077. [68354]

## ஆங்கிலக் கல்வி

ஆங்கிலம் ஆண்டு 5 முதல் ஆண்டு 11 வரை வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். பாடத்தில் குறைவானவருக்கு அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். தொடர்பு:- விளம்பர இல. 928, மே/பா உதயன். [68163]

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய்க் குற்றமுள்ள உத்தர நட்சத்திரமுடைய 36 வயது அழகிய மணமகளுக்கு மணமகன் தேவை. விளம்பர இல. 931, மே/பா. உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (68335)

## விற்பனைக்கு

பகவான் சத்தியசாயி பாபாவின் தமிழ் அருளுரை நூல்கள் பல இருக்கின்றன. தொடர்பு: 372, நாவலர் காலாசார மண்டபம் சமீபமாக, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [68371]

பாவனையில் உள்ள K-75 Kubota லாண்ட்மாஸ்டர் பெட்டியுடனும் கலப்பையுடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T. ஜெயசிங்கம், உடுவில் றோட், 2 ஆவது ஒழுங்கை, மானிப்பாய். (68308)

நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப்பெட்டி New Model Gold Star] விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- வேல்முருகன் இல. 307, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ. பேசி இல. 2668,3098. (68368)

## மணமக்கள் தேவை

ஆஸ்திரேலியா B.Sc எஞ்சினியருக்கும் நோர்வேயில் இருந்து வந்திருக்கும் பாவம் குறைந்த மணமகனுக்கும் 38 வயது B.A ஆசிரியருக்கும் 20 வயது B.Sc செவ்வாய்க் குற்றமுள்ள மணமகளுக்கும் மணமக்கள் தேவை. வராகி திருமண சேவை, 132, 3ஆம் கட்டை, கல்வியன்காடு. [68348]

## இந்துருவலி கப்பலில் பொருள்கள் ஏற்றும் வர்த்தகர்களின் கவனத்திற்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை மற்றும் கொழும்புக்கு விவசாய உள்ளீட்டுப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்களையும் ஏற்றுபவர்கள் 26 ஆம் திகதிக்கு முன் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

**வேல் ரேட் சென்ரர்,**
114, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

T. P. No, 2822 (68364)

## Chundikuli Girls' College
**Dr. Thillayampalam Vocational Training Institute**

### மனைப்பொருளியல் கற்கை நெறி

**புதிய வகுப்புகள் ஆரம்பம்: 01-09-1999**

★ நவீன முறையில் உடை தயாரித்தல்
★ உணவு தயாரித்தல்
★ பூவேலை அலங்காரம் ★ கைப்பணி
★ தலையலங்காரம் ★ துணி பெயின்டிங்

ஆகியன பயிற்றுவிக்கப்படும்.

மேற்படி கற்கைநெறியைப் பயில்வோருக்கு, இலவசமாக Spoken English வகுப்புகள் நடைபெறும். மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்.

அதிபர்,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/8590)

## கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி.

**O/L 99**
Paper Class
**கணிதம்**

சனி, ஞாயிறு
A.M. 7.00 – 9.00

ஆரம்பம்:
22-08-99

– நிர்வாகி

(68359)

## தாச்சி நடுவர் பயிற்சி

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் தாச்சி நடுவர்களுக்கான பயிற்சிவகுப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். பின்னர் இந்நடுவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இதுவரை பயிற்சி வகுப்பு பரீட்சையில் கலந்து கொள்ளாதவர்களும் கலந்து கொள்ளலாம் என யாழ். மாவட்ட தாச்சிச்சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். [ஐ-க]

## கண்ணீர் அஞ்சலி

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை
முன்னாள் தலைவர்
அமரர் **அம்பலவாணர் வரதராசா**
அவர்களின் மறைவையிட்டு அன்னாருக்கு
எமது இதய அஞ்சலிகள்
பணிப்பாளர், பணியாளர்கள்.
மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்.
[68352]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

### விஞ்ஞானபீடம்

முதலாம் வருடம் முதலாம் அரையாண்டு – 1999
இரண்டாம் வருடம் முதலாம் அரையாண்டு- 1999
இரண்டாம் வருடம் முதலாம் அரையாண்டு- 1998
மூன்றாம் வருடம் முதலாம் அரையாண்டு - 1998
மூன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு- 1997
விஞ்ஞானம் சிறப்புத் தேர்வுப் பரீட்சை - 1996, 1997

மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் 20-09-1999 ஆம் திகதி ஆரம்பமாகும். மாணவர்கள் பரீட்சைக்குரிய பரீட்சை விண்ணப்பப்படிவத்தினை உரிய கட்டண பற்றுச்சீட்டுடன் 28-08-1999-ம் திகதிக்கு முன்னதாக விஞ்ஞானபீட அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். எவ்வெப் பாடவிதான அலகுகளில் பரீட்சை நடைபெறும் என்ற விவரக் கொத்தையும் பரீட்சை விண்ணப்பப் படிவங்களையும் விஞ்ஞானபீட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பத்திரிகையில் இது தொடர்பாக முன்பு பிரசுரமான விளம்பரம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

- பதிவாளர்

(சி/8589)



**Stop falling hair !**
**Vanish dandruff !!**
**Healthy hair thrughout your life.**

**ONLY ANSWER IS Köln**

Shampoo, Conditioner and Revitalizer

Check Manufacture and expire dates & this emblems on the cartoon

Available in Pharmacies and groceries Please ask your dealers.
Tel : 01-237072/3, 0722-42518, 0722-53028, 077-344148.

(சி/8588)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் சுப்பிரமணியம்
(சுப்பையா)

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் சரவணை கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய நாகலிங்கம் சுப்பிரமணியம் அவர்கள் 21-08-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் முத்தாச்சியின் அன்பு மகனும், தருமலிங்கம், காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலாதேவியின் அன்புக் கணவரும், தவயோகம், சற்குணராசா (கொழும்பு கருமாரி றேடர்ஸ்), கோசலை, விஜயராசா, விஜிதா (யா/வேலணை சேர் வை. து. ம. ம. வி. மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான கந்தையா அன்னப்பிள்ளையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், தர்மகுலசிங்கம் (ஜேர்மனி), வரதராஜா (பிரான்ஸ்), கருணாநிதி, இராஜேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்பு அத்தானும் வனிதா (கொழும்பு), தாரணிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் சிவசக்தி, பொன்னுத்துரை, அழகியநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-08-99) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சரவணை புன்னை கெண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

சரவணை கிழக்கு,
வேலணை.
(68369)


G. C. E. (A/L) மாணவர்களின்
புதிய பாடத்திட்டத்திற்கமைய எழுதப்பட்ட
தமிழ் பௌதிகத்தொடரின்
முதல் வெளியீடான
**அடிப்படை இலத்திரனியல்**
**(BASIC ELECTRONICS)**
தற்பொழுது யாழ். குடாநாட்டில் விற்பனையாகின்றது

**ஆசிரியர்கள்:**
பு. ரவிராஜன் B Sc. Hons Jaffna M. Sc (Pera)
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
சு. றெ. ஜெயக்குமார் B Sc. (Jaffna), Dip in Ed.
(சஹிரா தேசிய கல்லூரி, காலி)
சு. நிமலன் B. Sc Special (Jaffna)
(ரொம்சோ பல்கலைக்கழகம் நோர்வே)

**ஆலோசகர்:**
பேராசிரியர் க. குணரத்தினம்
முதுநிலைப் பௌதிகப் பேராசிரியரும்
முன்னாள் துணைவேந்தரும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

விலை: ரூபா **200/-**
(விமானக் கட்டணம் உட்பட)

கிடைக்குமிடங்கள்:
திரு. அ. மா. சூசைதாசன்
அன்னை மருந்தக நிலையம்
பிரதான வீதி, பருத்தித்துறை.

திருமதி ஜெ. மகாதேவா
ஓய்வு பெற்ற ஆசிரியர்
435 கோயில் வீதி, நல்லூர்.
(68393)



எமது இன்றைய
**வெளியீடுகள்**

அஜித் – தேவயானி
நடித்த
▶ நீ வருவாய் என
(ஒரிஜினல் பிரதி
திரை அரங்குகளுக்கு முன் உரிமை)

கார்த்திக்கின்
▶ ரோஜா வனம்
▶ பொன் விழா
[CD பிரதிகள்]

**ஆர்க் வீடியோ**
**லைபிறறி**
அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
[சி/8654]


## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 22

அராலி சரஸ்வதி சனசமூக நிலைய சரஸ்வதி பாலர் பாடசாலையின் 34 ஆவது ஆண்டு மெய்வன்மைப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் தலைவர் க. விஜயவேல் தலைமையில் நடைபெறும்.

(இ-ரி-4)

### அம்பாறை...

[முதலாம் பக்கத் தொடர்]

யாதகராஜ் (முருகப்பிள்ளை வைரமுத்து— மட்டக்களப்பு) ஆகியோரே உயிரிழந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது

இந்தத் தாக்குதலில் 6படையினர் கொல்லப்பட்டதும் சிப்பாய் ஒருவர் காமடைந்ததும் தெரிந்தவையே.

(இ-6)

உ
சிவமயம்

# அந்தியேட்டி அழைப்பு

அன்புடையீர்,

24-7-1999 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

## திரு. சுப்பிரமணியம் கணேசன்

அவர்களின்

அந்தியேட்டி கிரியைகள் 21-8-1999 சனிக்கிழமை காலை 6 30 மணிக்கு வில்லூன்றி அந்தியேட்டி மடத்தில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியம் நாளை (23-8-1999) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

திருமதி க. லோகராணி [மனைவி]
மக்கள், மருமக்கள்

சூராவத்தை,
சுன்னாகம்.
(சி/8653)

# கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வலயம் பிரதிக்கல்விப்பணிப்பாளர்
**திருமதி கோகிலா மகேந்திரன்**
அவர்களின் அருமைத் தாயாரும் தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை முன்னாள் அதிபர்
**திரு. சிவசுப்பிரமணியம்**
அவர்களின வாழ்க்கைத் துணைவியுமாகிய
**திருமதி செல்லமுத்து சிவசுப்பிரமணியம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

சோலைக்குயில் அவைக்காற்றுக்கழகம்,
தெல்லிப்பழை.
(சி/8651)

## புராணப்படிப்பு

கொழும்புத்துறை. ஓக. 22

நல்லூர் ஸ்ரீ கந்தன் ஆலய உற்சவத்தை ஒட்டி நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் குருமூர்த்த ஆலயத்தில் தினசரி பிற்பகல் 2 30 மணி தொடக்கம் புராணப்படிப்பு நடைபெற்று வருகிறது.

[ஐ-30]

### "உதயன்"...

(முதலாம் பக்கத் தொடர்)

அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள உதயன் அலுவலகத்தின் பிற்பக்கமாக இந்த கிரனேட்டுகள் வீசப்பட்டன. கே. கே. எஸ். வீதியிலிருந்து அறுக்கையற்ற வளவு ஒன்றின் ஊடாக வந்திருக்கக்கூடும் எனச் சந்தேகப்படும் இனந்தெரியாதோர் அந்தக் காணிக்குள் இருந்து வீசிய கிரனேட்டுகள் உதயன் அலுவலகத்தின் பின் பக்கத்தில் கார் தரிப்பிடம், சைக்கிள் தரிப்பிடம், ஜெனரேட்டர் அறை ஆகியவற்றுக்கு மத்தியில் உள்ள முற்றத்தில் வீழ்ந்துள்ளன.

சுமார் 15 செக்கன் இடைவெளியில் அடுத்தடுத்து பெரிய சத்தத்துடன் வெடித்த இந்த கிரனேட்டுகளினால் இரவு நேரம் நகரில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த சம்பவம் குறித்து அறிந்தவுடன் இராணுவ அதிகாரிகள் விரைந்து வந்து விசாரணைகளைமேற்கொண்டனர்.

பத்திரிகையை அச்சுறுத்தும் விதத்தில் இந்த கிரனேட்டுகள் வீசப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது.

'பத்திரிகைச் சுதந்திரத்துக்கு வேட்டுவைத்து பத்திரிகையாளர்களை அச்சுறுத்தும் விதத்தில் நடத்தப்பட்ட இத் தாககுதல் கண்டிக்கத்தக்கது'— என்று இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழு நேற்றிரவு தெரிவித்தது.

(உ)

### அலங்கார...

(முதலாம் பக்கத் தொடர்)

சேவைகளைச் சித்திரிக்கும் வகையில் 200க்கும் அதிகமான அலங்கார ஊர்திகளும் பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டன.

இப்பேரணியில் இறுதியில் பொதுக் கூட்டம் இடம் பெற்றது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பேரணியையடுத்து நகரின் பலபகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் 7 ஆயிரத்துக்கும் அதிகமான பொலீஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

(இ-5-6)

### ஈழத்தில்...

(ஆறாம் பக்கத் தொடர்)

எனவே சைவ மக்களாகிய நாம் அல்லற்பட்டு இங்கு வருவதற்கு முன்பே நாம் வணங்கும் தெய்வங்கள் பல லண்டனில் நூதனசாலையில் காத்திருந்தன. எனவே இன்று நாம் வணங்கும் தெய்வங்கள் எமக்கு முன்பே இவ்விடத்தில் தங்கி எம்மை அரவணைத்தன.

இவ்வளவு சிறப்பாக நடைபெறும் தேர் திருவிழாவோடு சமயப் பணி முடிந்துவிடவில்லை உங்கள் எதிர்காலச் சந்ததி இதைத் தொடர்ந்து பேணுவதற்கு நீங்கள் வழிகாட்டுங்கள். சைவ சமய தத்துவங்களை, புராண இதிகாசங்களை உங்கள் பிள்ளைகளுக்குக்கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்வதே சாலப்பொருத்தமாகும். இன்று ஈழத் திருநாட்டில் வாழும் உங்கள் உறவினர்களுக்காக இறைவனைக் கரமகூப்பி பிரார்த்தியுங்கள், மன்றாடுங்கள். கடலுக்குக் கூட இவ்வுலகில் எல்லை வைத்த கடவுள் எம் கண்ணீருக்கு எல்லை வைக்க மாட்டாரா? என்று ஏக்கத்தோடு முற்றுமுழுதான இறை நம்பிக்கையோடு எல்லோருமாகப் பிரார்த்திப்போம் — என்று கேட்டார். ★

[ஐ-73]


**யாழ்நகரில்** **நவீன சந்தையில்**



**மீண்டும் மங்களகரமாக ஆரம்பம்**

(கம்சனா)
**A. J. M. புடைவை நிறுவனம்**

பத்து வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்தது
மேற்படி எமது நிறுவனம்
நிகழும் பிரமாதி வருடம்
ஆவணி மாதம் 6ஆம் நாள் **(23-08-99)** திங்கட்கிழமை
காலை 6.35 மணி முதல் 8.00 மணி வரையுள்ள (புதிய நேரம்)
சுபமுகூர்த்த வேளையில் திறந்து வைக்கப்படும்.



எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் மிக அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

147, நவீன சந்தை, (வயிரவ கோயிலுக்கருகில்)
யாழ்ப்பாணம்.
(68398)

தங்கள் நல்வரவை நாடும்
L. யோசேப்
(செல்லவமாணிக்கம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஜமுகா ரேட் சென்ரர்

மொத்த சில்லறை வியாபார நிலையம்

போட்டோ ஸ்ரட் மெஷின் (Canon NP-1215)

T.V. · டெக் · Video CD டெக் · Audio · Video CD Set Up · Panasonic Rx றேடியோ · ஒகன் · றம் செற் மற்றும் · ரெலிபோன் Panasonic · Panapone வகைகளையும் · பிளாஸ்ரிக் கதிரைகள் · வாளிகள் உட்பட · பிளாஸ்ரிக் வகைகளையும் · C.I.C. தயாரிப்புக்களான · றபர் சிலிப்பர் (Ransirs) · விவசாய இரசாயனங்கள் · உரம் · தெளிகருவி · விதைகள்

போன்ற உள்ளீடுகளையும் இவற்றுடன்
இசைப்பிரியர்களுக்கான புதிய பழைய இடைக்கால பாடல்கள், படங்களுக்கான
Audio CD (Ramy, King CD) · Video CD
பேரன்ற யாவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
நியாய விலையில் பெற்றுக் கொள்ள

**கஜமுகா றேட் சென்ரர்**
இல. 281, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. NO, 021-2049

**பவானி ஸ்ரோர்ஸ்**
இராஜ வீதி,
நீர்வேலி.
T. P. NO. 070-212363

[68357]


## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

டத்தில் கலந்துகொண்டனர்.

வவுனியாவில் மின்மாற்றிகள் குண்டு வைத்து தகர்க்கப்படும் சம்பவங்கள் அதிகரித்ததை அடுத்து அங்குள்ள 12 மின்மாற்றிகளை உடனடியாக அகற்றுமாறு மின்சார சபைக்கு வவுனியா நகர பிரிகேடியர் உத்தரவிட்டிருந்தார்.

மின்மாற்றிகள் அகற்றப்பட்டால் சுமார் 4 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்படையும் என தெரிவிக்கப்பட்டதை அடுத்து தற்போது புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. [இ-6-164]

## கோரிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்யப்பட்டவர்களே இந்த விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய முடியும் என்றும் நாம் காணாமல்போன எமது பிள்ளைகளைத் தேடிக்கொண்டிருப்பதால் இந்த விண்ணப்பம் எமக்குப் பொருந்தாது என்றும் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள்ளது.

(இ-5)

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்)

ஒன்று பட்டுச் செயற்பட வேண்டும்.

இப்படி ஜனாதிபதி கேட்டுக் கொண்டனர்.

இலங்கையில் இனவேறுபாடு அற்ற மதவேறுபாடற்ற சமூகம் ஒன்றை உருவாக்குவதே அரசாங்கத்தின் குறிக்கோள் என்றும் அடுத்த ஆண்டு இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும்போது இதனை செய்துவிடலாம் என்றும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

1948 ஆம் ஆண்டு இந்த நாட்டின் பொருளாதாரம் ஸ்தம்பிதம் அடைவதற்கு இனப்பிரச்சினைதான் காரணம் என்றும்ஜனாதிபதி கூறினார்.

(இ-5-6)


A/L எடுத்தவர்களுக்கான
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 25-8-99

**OXFORD ENGLISH ACADEMY**

நெல்லியடியில்
பிற்பகல் 5, 00 மணி
(அனுமதியை Maths Centre இல் பெறவும்.)

பருத்தித்துறையில்
ஆலடிப்பிள்ளையார் வீதி
சுப்பர் மடம்.
பிற்பகல் 4.00 மணி

By: Mr B JOTHY
[B. Com (Hons)]
(அனுமதியை முற்கூட்டியே பெறவும்.)

(68278)


## ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்)

விபத்தில் பலியானவரின் சடலம் சில மணிநேரம் வரை வீதியோரத்தில் கிடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

இந்தச் சம்பவத்தில் இறந்தவரின் ஷேர்ட் பொக்கெட்டிலிருந்த தேசிய அடையாள அட்டையில் ஆறுமுகம் யோகராசா 1 ஆம் வட்டாரம், வேலணை வட கிழக்கு என்ற முகவரி காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-5-74-ரி)


முன்னாள் பிரபல தென்னிந்திய நடிகரின் இன்னாள் நிலை

**A. V. M. ராஜன், புஸ்பலதா**

குழுவினர் பங்குபற்றும்
மாபெரும் நிகழ்ச்சி

# அன்பு வெள்ளம்



**நேரில் சந்திக்கத் திரண்டு வாருங்கள்!**
ஒகஸ்ட் 24 முதல் செப்டெம்பர் 05 வரை

| காலம் | நேரம் (SLT) | இடம் |
|---|---|---|
| 1) ஒகஸ்ட் 24 முதல் 25 வரை | காலை 11 மணி | திறந்தவெளி அரங்கு, ஊர்காவற்றுறை. |
| 2) ஒகஸ்ட் 26 முதல் 27 வரை | மாலை 3-30 மணி | உடுவில் மகளிர் கல்லூரி மைதானம். |
| 3) ஒகஸ்ட் 28 முதல் 29 வரை | மாலை 3-30 மணி | யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம், வட்டுக்கோட்டை. |
| 4) ஒகஸ்ட் 30 முதல் 31 வரை | மாலை 3-30 மணி | UC மைதானம் சாவகச்சேரி |
| 5) செப்டெம்பர் 1 முதல் 2 வரை | மாலை 3-30 மணி | திக்கமுனை மைதானம், பருத்தித்துறை. |
| 6) செப்டெம்பர் 3 முதல் 5வரை | மாலை 3-30 மணி | துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம். |

(நேரங்கள் யாவும் புதிய நேரப்படி)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!**
**பிரவேசம் இலவசம்!!**

(சி/8310)



கல்வி சார் நிறுவனங்களுக்கோர்
**நற்செய்தி**

எம்மிடம்
COMPUTER DISKETS
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

COMPUTER SYSTEM
தேவைப்படுவோர் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

T V டெக், Ahuja Amplifier

றேடியோ T V உதிரிப்பாகங்கள்
விற்பனையும் திருத்துதலும்

Unic விற்பனைப் பிரதிநிதிகளான எம்மிடம்
Unic U T - 7H703 றேடியோக்கள்

DENSHI கறுப்பு வெள்ளை T V கள் விற்பனையாகின்றன

**V. K. இராசரத்தினம்**
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(68396)


## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும்
திரு. எம். ஏ. யேசுதாஸ் அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி **மரியான் மாமரி**

அவர்கள் 1999—08—20 ஆம் திகதி காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைகிறோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்-

பிரதேச செயலரும்,
நலன்புரிச் சங்க உறுப்பினர்களும்.

பிரதேச செயலகம்,
வலி. மேற்கு,
சங்கானை.

(68362)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361, இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்22 - 08 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org